கலாசிந்தாமணி

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

புத்தகம் 3	பிங்கள௵ கார்த்திகைமீ நவம்பர்மீ 1917	ஸஞ்சிகை 2

கடவுள் வாழ்த்து

உயர்வறவுயர்நலமுடையவனெவனவன்
மயர்வறமதிநலமருளினனெவனவ
னயர்வறுமமரர்களதிபதியெவனவன்
றுயரறுசுடரடிதொழுதெழென்மனனே.

—திருவாய்மொழி.

மூவாமுதலாவுலகமொருமூன்றுமேத்தத்
தாவாதவின்பந்தலையாயதுதன்னினெய்தி
யோவாதுநின்றகுணத்தொண்ணிதிச்செல்வனென்ப
தேவாதிதேவனவன்சேவடிசேர்துமன்றே.

—சீவகசிந்தாமணி.

ஒருப்படுமறத்தினாலேயொண்பொருளின்பஞ்செம்பொற்
பருப்பதங்கடல்போல்வந்துபயப்படுமதனைக்கேண்மோ
விருப்பொடுவெறுப்பிலாதமிக்கவெண்குணத்தோடொன்று
யிருப்பவன்யாவனன்னானிணையடிவணங்கல்வேண்டும்.

—விநாயகபுராணம்.

நோக்கின்றிக்கண்டுநனிகையின்றிக்கொடுத்துமறைநுவல்வதாய
நாக்கின்றியறுசுவையுமினிதுணர்ந்து காலின்றிநடத்தல்செய்து
மூக்கின்றிமணங்கவர்ந்துஞ்செவியின்றிக்கேட்டுமறைமுதல்வர்
யார்க்கும், வாக்கன்றிமனத்தினுக்குமெட்டா
நின்றுமறைத்தாள்வணங்கல்செய்வாம்.

—காசிகண்டம்.

1917ஆ நவம்பர்—டிசம்பர்மீ

பிங்களஆ கார்த்திகைமீ

	குரு.	கே.	
	நவம்பர்மீ 15உக்கு ராசி.	ச.	
		கு.	
சுக். ரா.	ர. பு.		

தக்ஷிணாயணம் சரத்ருது	பசலி 1326 1327	சாலி 1840
கொல்லம் 1092.	கலியுகம் 5019	ஹிஜரி 1335

யோகம்.	இங்மீ.	தமிழ்மீ.	வாரம்.	திதி, நக்ஷத்திரம், முதலியன.
ம	16	கார்த்திகைமீ 1	வெ	துவி 42-57, அநு 5-31, தி 19-15.
சி	17	2	சனி	திரி 40-58, கேட் 5-50, தி 25-34.
அ	18	3	ஞா	சௌ 37-55, மூல 5-2, தி 1-5, ரா 0-14.
ம	19	4	திங்	பஞ்33-53, பூரா3-12, தி22-18.(ம்மாரஷஷ்டி
சி	20	5	செ	ஷஷ்29-6, உத்தி0-32, திரு57-0, தி10-0, சூரச
பி	21	6	புத	ஸப் 23-45, அவி 53-47, தி 5-28.
ம	22	7	வி	அஷ் 18-1, சத 49-16, தி 10-12, திதித்வயம்.
சி	23	8	வெ	நவ 12-13, பூரட் 45-1, தி 48.
சி	24	9	சனி	தச 6-10, உத்திர 40-55, தி 7-22.
சி	25	10	ஞா	ஏகா 0-26; துவா 54-35, ரே 37-12, தி 9-3.
சி	26	11	திங்	திர 50-21, அசு 34-2, தி 24-34, ரா 29-8.
சி	27	12	செ	சதுர் 46-27, பர 31-34, சேஷத்ய0-52 (பம்
அ	28	13	புத	○ 43-32, * கிரு 30-0, தி 0-47, அருணசலதீ
ம	29	14	வி	பிர 41-45, ரோ 29-30, தி 9-40, ரா 15-48.
சி	30	15	வெ	துவி 41-5, மிரு30-2, ரா 24-9, சித்தயோகம்.
சி	டிசம்பர்மீ 1	16	சனி	திரி 41-44, அரு 32-37.
சி	2	17	ஞா	சௌ 43-41, புன 35-4, தி 4-0, ரா 28-47.
சி	3	18	திங்	பஞ் 46-51, பூசம் 39-21, சேஷத்யா 0-46.
சி	4	19	செவ்	ஷஷ் 51-4, ஆயி 44-39, தி 14-10.
சி	5	20	புத	ஸப் 56-4, மக 50-9, தி 16-44.
சி	6	21	வி	அஷ் 60-0, பூரம் 57-16, தி 12-58. (கம்.
சி	7	22	வெ	அஷ் 1-36, உத்தி 60-0, தி 17-13, அமிர்தயோ
ம	8	23	சனி	நவ 6-58, உத்தி 3-48, தி 26-55 (யோகம்
அ	9	24	ஞா	தச 11-52, ஹஸ் 9-52, ரா 3-53, அமிர்தசித்த
பி	10	25	திங்	ஏகா 16-36, சித் 15-7, ரா 2-34, சர்வஏகாதசி
சி	11	26	செ	துவா 18-56, சுவா 19-23, ரா6-44, சூன்யதிதி
சி	12	27	புத	திர20-41, விசா 22-28, ரா5-7, மாதசிவராத்தி
சி	13	28	வி	சதுர் 21-10, அநு 24-18, ரா 10-46.(தற்பண
ம	14	29	வெ	● 20-22, கேட் 24-55, ரா 17-5, அமாவாசை

இயற்கை அமைப்பு

பிரபஞ்ச தோற்றங்களை யாம் சிறிது உற்று நோக்கினால் கடவுளின் அற்புதங்கள் நன்றாய் விளங்கும்.

1. தாவரங்களை ஆராய்வோமாக. தாவரங்களாவன வித்தினும், வேர், கொம்பு, கொடி, கிழங்குகளினும் பிறக்கும் நிலையியற் பொருள்களான மரம், செடி, கொடி முதலியன.

தாவர வடிவங்களில் அமைந்துள்ள தோற்றமும், சிறப்பும், விநோதமும், அளவிடப்படாத கிரம வரிசைகளும், இவற்றால் மிருகங்கட்கும், மிருகங்களால் இவற்றுக்கும் உண்டாகும் பெரும் பிரயோசனமும், இவற்றுக்கு ஆதாரம் மண்ணேயாகவும் அதனின்று தமக்கு வேண்டிய ஆகாரத்தைக் கவரவல்ல கை, கால் முதலிய உறுப்புக்கள் மிருகங்களுக்குப்போல் இல்லாதிருப்பவும் அங்ஙனம் கவர்தற்கியைந்த வேர்கள் அவற்றுக்கும் கொடுக்கப்பட்டிருத்தலும் வியக்கத்தக்கன.

2. மண்ணினகத்துள்ள ஆகாரத்தைக் கவர்தற்கியைந்ததோர் அதிநூதன ஆற்றல் அவ்வேர்களிலே அமைந்துள்ள அதிசயமும், அவ்வாற்றல் தாவர தோற்றங்களின் பிறபாகங்களினின்றி வேர்களில் மாத்திரமே காணப்படும் மரபும், இவ்வேர்கள் கூரிய அம்புபோன்று மண்ணைப் பிளந்து ஊடுருவிச் செல்லும் வன்மையும், இவ்வேர்கள் செல்லும் வழியிலே கல் முதலிய தடைகள் எதிர்ப்படுமிடத்து அத்தடைகளை விலகி அப்பாற் செல்லும் இயல்பும், தாவரங்களின் பிறபாகங்கள் மண்ணிற் பட்டவழிக் கெட்டொழியவும் இவ்வேர்கள் அங்ஙனமின்றிச் செழிப்புற்று ஓங்கும் முறையும், இத்தகைய இலக்கணம் வேர்களுக்கு இன்றியமையாது வேண்டப்படுமாறும் அதிசயிக்கத் தககன.

3. வேர்கள் கவர்ந்து கொடுக்கும் சத்தினை மரத்தின்உடம்பெங்கணு ஆங்காங்குச் செலுத்தவல்லதோர் ஆற்றல் அம்மரத்தின் அமைந்துள்ளவாறும், இம்மரங்கள் ஆங்காங்குப் பெறும் ஆகாரத்தைத் தத்தமக்கியைந்த சத்தாகத் திரித்துக் கொள்ளும் அப்பெருவிந்தையும், அந்தச்சத்தினும் மரத்துக்கு வேண்டுவன மரத்துக்கும், பட்டைக்கு வேண்டுவன பட்டைக்கும் இலைக்கு வேண்டுவன இலைக்கும், காய்க்கு வேண்டுவன காய்க்குமாக வரன்முறை தவறாது தக்க அளவாக செலுத்தப்படும் நியதியும் பேராச்சரியத்தை உண்டுபண்ணக் கூடியன.

4. இலை பூவாதிகள் முதிர்வடைந்த விடத்து அந்தச் சத்து அவற்றுக்குச் செல்லாது இளங்காய் இலைகளை நாடிச்செல்லும் மரபும், இனி ஒரு படித்தாகிய ஒரு ஆகாரந்தானே மரங்கள்தோறும் வேறு வேறியல்பினவாகிய பலபல இரசகுணங்களாய்த் திரியு முறையும், இங்ஙனமாய்த் திரித்துக் கொள்ளு

தல் நம்மனோர் புத்திக்கும் சாமர்த்தியத்துக்கும் அதீதமாகியதோர் பெருநூதனமாய்க் கிடக்குமாறும் தேவதச்சரால் அமைக்கப்பெற்ற சித்திரமண்டபங்கள்போல, இவற்றின் கொம்பு, இலை, பூ முதலாயின வெல்லாம் நரம்புபோன்ற மெல்லிய துரும்பாதியவற்றால் நிரைக்கப் பெற்று, சத்தால் வேயப் பெற்று அதி விசித்திரமான மாடகூடங்களை ஒத்த பற்பல பகுப்புகளைக் கொண்டு, எத்துணைச்சிறந்த பொன்வினை மாக்களானும் நினைத்தற்கரிய மகா விசித்திர விநோதங்களும் வர்ணங்களும் புனையப்பெற்றுக் கிடக்கும் காட்சியும் இறும்பூது பயப்பனவேயாம்.

5. தாவரங்கள் உலகத்திலே பல்கிப்பெருகி நிலைபெறுமாறு இவற்றின் பிரமாண்ட உருவ காரணங்களை யெல்லாம் நுண்ணிதினும் நுண்ணிதாக்கித் தம்பாற் கொண்டுள வித்துக்கள் இவற்றின்கண் தோன்றும் அதிசயமும், வித்துக்களிலிருந்து அவ்வத்தாவர தோற்றம் அதி நூதன சால வித்தைகளைப்பார்க்கினும் நூதனமாய்த் தோன்றும் சிறப்பும், இந்த வித்துக்கள் பழுதடையாமைப் பொருட்டு அவை யெல்லாம் தத்தமக்கியைந்த காப்புகளினாலே காவல் செய்யப்பட்டிருக்கும் நெறியும், இந்தக் காப்புகளாகிய உறைகளிலே அவ்வம்மரங்கள் முளை கொண்டு வெளி கிளம்புவதற்கியைந்ததோர் மிருதுவாகிய பாகம் அமைந்திருக்கும் வியப்பும், அத்தோற்றங்கள் அங்ஙனந்தோன்றி வேர் விடுத்து மண்ணினின்று ஆகாரத்தை உரிஞ்சுதற்கமைந்த பக்குவத்தை அடையும்வரை அவ்வவற்றைப்போஷித்துக் காத்தற்கமைந்த பதார்த்தங்கள் அவ்வித்துக்களிற்றானே அமைக்கப்பட்டிருக்கும் அதிசயமும் நோக்கற் பாலன.

6. தாவரங்கள் பல்கிப்பெருகுமாறு அவ்வவற்றின்வித்துக்களைப்பிறப்பித்தற்கியைந்த ஆண் மரங்களும் பெண்மரங்களும் அமைந்திருக்கும் நூதனமும், ஆண்மரத்துள்ள ஆண்சத்தைப் பெண்மரங்களினுள்ள பெண்சத்தோடு சேர்த்து அந்தந்த மரத்தின் விதையைப் பிறப்பிக்கும் அப்பேர் இரகசியமும் ஆண்மரங்கள் இல்லாதவர்க்கங்களில் ஆண்சத்தும் பெண்சத்தும் ஒரேமரத்திற்றானே அமைக்கப்பட்டிருக்குமுறையும் ஆராயத்தகுந்தன.

7. இளங்காய் பூவாதிய மெல்லிய பாகங்கள் வெப்ப முதலிய ஏதுக்களால் தீதுறுவண்ணம் அவை பாளைகளால்காக்கப் பட்டிருக்கு மியல்பும், பூக்களின் கண்ணே அமைந்து கண்டார் பரிசித்தாரது இந்திரியங்களைக் கொள்ளை கொள்ளத்தக்க விசித்திர வர்ணங்கள் பரிமள கந்தங்கள் என்றுள்ள இவற்றின் பெருமையும் மிருதுவாகியதோர் வித்தில் நின்று இரும்பும் ஒன்றோ என்று சந்தேகிக்கத் தக்க மராமரங்கள் பிறக்கும் முறையும் இன்னும் விரித்துரைக்கப்புகின் எட்டிலடங்காதஅத்துணைப் பெரும் கிரம பிரயோசன நூதனங்களும் கடவுளுண்மையை நிலை நாட்டும்.

கனு

கனு என்பது நம்மெல்லோருடைய உணர்ச்சிக்கும் நன்ருக எட்டிய ஓர் அரிய அநுபவம். நம்மில் சிலர் எப்பொழுதாவது அருமையாகவும், சிலர் அடிக்கடியும் கனு காண்கின்ருேம். படுக்கையில் ஏறிக் கண்மூடிய நேரமுதல் விழித்தெழுகின்றவரையும் இடை விடாமல் கனவே கண்டுகொண் டிருப்போரும் பலர் உளர். தூக்கத்திலே சிலர்தேம்பித் தேம்பிஅழுவதும்,சிலர் திடுக்கிட்டு எழுவதும், சிலர் நகை முகங்காட்டுவதும், சிலர் நாக்குழறி அரற்றுவதும் நாம் பலகாலும் கண்டும் கேட்டும் இருக்கின்ருேமே! இவையெல்லாம் இந்தக் கனுவினுல் விளைகின்ற வியப்பேயன்றி வேறல்ல! நாம்காணும் கனவு நல்லதாயின் களிப்படைகின்ருேம்; தீயதாயின் கவலேயடைகின்ருேம். இது மக்கள் இயற்கை. எப்போதும் நமக்கு இன்பமும் துன்பமும் ஊட்டி எளிதாக நம்மைத் தன்வழியே இழுத்துக் கொள்ளும் இக்கனவினுடைய ஆற்றலும் அருமையும் சற்றே எண்ணிப்பாருங்கள்!—பெரிதும் புதுமை! இவ்வளவு புதுமையான இது யாது? எப்படி உண்டாகின்றது? என்ருல்; இக்கேள்விகளுக்கு விடைதருதல் எல்லோருக்கும் ஆகாது,—ஞானசாத்திரத்திலே நன்கு பழகிஞேர்க்கேயன்றி ஏனையோருக்கு இது எளிதன்று.

சிலர், "யாதொரு நனவு, நினைவிலே முற்பட்டு நிற்கின்றதோ அதுவே கனவாக வருகின்றது" என்றும்; சிலர், "அறிவினுல் முற்றும் அறிந்து கொள்ளப்பெருத எண்ணங்களே—Digested idea— கனவாம்" என்றும் கூறுகின்ருர்கள். இதுதானே கனவு?

நமது சரீரம் முப்பத்தாறு தத்துவங்கள் அடங்கியது.இவற்றுள், ஆன்மா முதலாம் தத்துவம். இது, சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என்னும் ஐந்தவத்தையும் அடையும்; அவ்வாறு அடைகின்றபோது இது வெவ்வேறு தத்துவங்களோடு கூடி, உடம்பின் வெவ்வேறு இடத்தில் வீற்றிருந்து, வெவ்வேறு அவத்தை உறும். அதாவது, ஆன்மாவானது ஞானேந்திரிய முதலாகிய முப்பத்தைந்து கருவிகளுடன் கூடிப் புருவ நடுவிலே வீற்றிருந்து சாக்கிரத்தையும்; இருபத்தைந்து கருவிகளுடன் கண்டத்திலே இருந்து சொப்பனத்தையும்; சித்தம் பிராணன் புருடன் என்னும் மூன்று கருவிகளோடும் இதயத்திலே தங்கிச் சுழுத்தியையும்;பிராணனும் புருடனுமாகிய இரண்டு கருவிகளோடும் உந்தியிலே நின்று துரியத்தையும், மூலப்பகுதியும்--புருடன்--தானுமாக மூலாதாரத்திலே அமர்ந்து துரியாதீதத்தையும் உறுகின்றது.

ஆன்மா சாக்கிராவித்தை உறும்பொழுது அங்கே தொழிற்படும் முப்பத்தைந்து கருவிகளாவன யாவை? என்றால்;மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஞானேந்திரியம் ஐந்தும்; வாக்குப் பாதம் பாணி பாயு உபத்தம் என்னும் கன்மேந்திரியம் ஐந்தும்; சத்தம் பரிசம் உருவம் இரதம் கந்தம் என்னும் சத்தாதி விடயம் ஐந்தும்; வசனம் கமனம் தானம் விசர்க்கம் ஆனந்தம் என்னும் வசனாதி ஐந்தும்; பிராணன் அபானன்வியானன் சமானன் உதானன் நாகன் கூர்மன் கிருகரன் தேவதத்தன் தனஞ்சயன் என்னும் பிராணாதி பத்தும், மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அந்தக் கரணம் நான்கும், மூலப்பகுதியுமாகிய இவைகளாம்.

இவற்றுள், ஞானேந்திரியமும் கன்மேந்திரியமும் நீங்கலான இருபத்தைந்து கருவிகளும் தொழிற்படும்படி ஆன்மாவானது கண்டத்திலே அமர்ந்திருக்கும் நிலையே சொப்பனாவத்தையாம்.'சாக்கிரம்-விழிப்பு. சொப்பனம்-கனவு''ஆன்மா இலாடத் தானத்தை--புருவநடு--விட்டு, கண்டத்தானத்திலே இறங்கிவந்தபோது இந்திரியங்கள் அவ்விடம் இன்மையினாலே வியாத்தி குலைந்து அமைத்தையுற்றுக் கண்டசனைவைப் பிறருக்குச் சொல்லும்,ஆகலின்; சொப்பனம் எனப்பட்டது.'

பறவை பறத்தல் நருவி கூவுதல் பல்லி கொட்டுதல் முதலியவற்றைக் கொண்டு நிமித்தம் கணித்தலும் பலாபலன் துணிதலும் நமது நாட்டிலே தொன்று தொட்டுவந்த வழக்கமாதலால், அவ்வது பற்றிப் பலநூல்கள் செய்யப்பட்டுள்ளன. அவ்வாறே ''கனா நூல்'' என்ற ஒருசாத்திரமும் பழமையாக வழங்கிவருகின்றது. இதை நோக்கும்போது கனவினிடத்தில் முழு நம்பிக்கை வைத்து நடந்தவர் நம் தமிழரேயன்றி வேறுயாவரும் உலகத்திலே இருந்தாரெனவும்எண்ண இடமில்லை. உரோமர் கிரேக்கர் முதலிய நாகரீக முதிர்ந்திருந்த சிலரிடத்திலும் கனவை நம்புமவழக்கம் முற்காலத்திலே நடையாடி வந்ததாகச் சரித்திரம் தெரிவிக்கின்றதாயினும், அதை அவர் இக்காலத்தில் முற்றும் கைவிட்டு விட்டார்கள். அந்நிய தேசாசாரங்களையே அதிகமாக விரும்பி அநுசரிக்கக் கற்றுக்கொண்ட நம் நாட்டிலே சனவைப் பற்றிய கொள்கைகளெல்லாம் இப்பொழுதே பெரும்பாலும் ஒழிந்து போயின. எஞ்சிக்கிடக்கும் கொஞ்சந்தானும் இன்னம் சில நாளிலே இருந்த இடமும் தெரியாமல் மறைந்தொழிந்து போகாதோ?

இனி கனவிலே கண்டனவெல்லாம் நனவிலும்வந்து நிகழுமென்று திண்ணிய நம்பிக்கை கொண்டிருந்து அவ்வாறே நன்

மையடைந்தோர் பண்டு பலரும் இன்று சிலருமா இருக்கின்றார்கள். மற்று, கனவினைக் கடைசிவரையும் நம்பி நம்பி, முயற்சியொழிந்திருந்து, முன்னுள்ள பொருளும் இழந்து, வெறுங்கையராய் வறுமை அடைந்தோர் பண்டு சிலரும்! இன்று பலருமா இருக்கின்றார்கள். இஃது என்ன கொடுமை! தன்னைப் பொருட்படுத்தாமல் நம்பிக்கை யற்று நடப்போருக்குக் கனு பொய்த்துப்போமாயின், அது குற்றமாகாது; ஆனால், தன்னிடம் முழு நம்பிக்கை பூண்டு போற்றுவோருள்ளும், சிலருக்குப் பயன் அளித்தும், சிலருக்குப் பயன் அளியாமலும் போவது எதுபற்றி? என்றால்; கனுக்களெல்லாம் உணர்ச்சிவகையால் ஒன்று போலவே காணப்பட்டாலும், அவை ஒரே தன்மையன அல்ல. பல காரணங்களைக் கொண்டு பிறப்பனவாகிய பல தன்மையன ஆதலால், தத்தம் காரணத்திற்கேற்ப, பலன் உள்ளனவாகவும் இல்லனவாகவும் இருக்கின்றன.

கனுவானது, கண்டது கேட்டது உண்டது நாடியது கட்டியது நோயது வரக்கடவது என எழுவகைப்படும்.

1. விழிப்பு நிலையிலே கட்புலனாலே நாம் கண்டறிந்த பொருள்களை மறுபடியும் கனவிற் காணுதலே திருட்டமாம். திருட்டம்-கண்டது.

2. விழிப்பு நிலையிலே செவிப்புலனாலே நாம் கேட்டறிந்து துணிந்து கொண்ட பொருள்களைப் பின்னும் கனவிற்காணுதலே சுருதமாம். சுருதம்—கேட்டது.

3. விழிப்பு நிலையிலே பல புலன்களாலும் நாம் அநுபவித்த பலபொருள்களையும் மறித்தும் கனவிற் காணுதலே அநுபூதமாம். அநுபூதம்-உண்டது.

4. விழிப்பு நிலையிலே, பெறவேண்டுமெனப்பலகாலும் நாம் நாடியிருந்த பொருள்களைக் கனவிலே கிடைக்கப் பெறுதலே பிரார்த்திதமாம் பிரார்த்திதம்-நாடியது.

5. விழிப்பு நிலையிலே, காட்சி கருத்து உரை முதலிய அளவைகளால் அறுதியிட்டுத் தெளிந்த பொருள்களைக் கனவில் அடையப் பெறுதலே கல்பிதமாம். கல்பிதம்-கட்டியது.

6. வாதம் பித்தம் கபமென்னும் திரிதோடங்களின் மிகுதியினாலும் கனு உண்டாகின்றது. இதற்குத் தோடசம் என்று பெயர். தோடசம்-நோயது.

இங்கே சொல்லிய அறுவகைக் கனுக்களில் ஒன்றாவது பயன் தருவதன்று. ஏனென்றால், இவையாவும் பெற்றவற்றின்

நினைவையும் பெறுமவற்றின் நினைவையும் அடியாகக் கொண்டு தோன்றுவன.

7, மற்று, உலகத்திலே நிகழத்தக்கனவாகவும், ஆயினும் முன்னரே நினையாதனவாகவு முள்ள பொருள்களைக் கனவிற் காணப் பெறுதலே பாவிகமாம். 'விழிப்பு நிலையிலே இனிவர நின்ற பயன்களை எண்ணி நிகழும் வழக்குக் கனவிலே நிகழ் தலே பாவிகமாம்' என்பாரும் உளர். பாவிகம்-வரக்கடவது.

இப்பாவிகம் ஒன்றே பயன்தரத் தக்கது. இதனையே, இல்லைக் கனா முந்துறாத வினை"— (பழமொழி)—என முன்றுறை யரையனாரும் கூறினார். பாவிகக் கனவினுள்ளும், பகற்பொழு திலே கண்டனவும், இடையிடை மறக்கப் பெற்றனவும், நெடு நேரம் தொடர்ச்சியாகக் கண்டனவும், சிறிது நேரத்துள் கண்டு முடிந்தனவுமாகிய இவையெல்லாம் பயனொடு பொருந்தின அல்ல. அன்றியும் இரவின் முற்பகுதியிலே காணும் கனாக்கள் நெடுங்காலம் கழிந்த பின்னரே சிறிது பயனைத் தருவனவாம். பிற்பகுதியாகிய விடியற்காலத்திலே காணும் கனாக்கள் விரைவிலே பயனைத் தருவனவாம். இரவின் முற்பகுதியிலே காணும் கனாவைப் பூர்வராத்ரிஸ்வப்பநம் என்றும், பிற்பகுதியிலே காணும் கனாவைக் கோஸர்க்க ஸ்வப்பநம் என்றும் கூறுவர் வடநூலார். கோஸர்க்கம்-கிழக்கு வெளுக்கும் காலம்.

இதுவரையும் சொல்லிப் போந்தவற்றால்; கனா என்பது நாமெல்லோரும் அறிந்த ஓர் அரிய உணர்ச்சியே எனவும், இது ஆன்மாவின் ஐந்தவத்தையுள் ஒன்றெனவும், இந்திரியங்கள், ஒழிந்த ஏனை இருபத்தைந்து தத்துவங்களும் தொழிற்படும்படி ஆன்மா கண்டத்திலே இறங்கி நிற்பதே சொப்பனாவத்தை எனவும்; இது, திருட்டம் சுருதம் அநுபூதம் பிரார்த்திதம் கல்பிதம் தோடசம் பாவிகம் என எழுவகையாம் எனவும்; இவற்றுள், முதல் ஆறுவகையும் பயன் தருவன அல்ல; மற்றுப் பாவிகம் ஒன்றே பயன் தருவதாம் எனவும் கனாவின் வரவும் வகையும் ஒருவாறு தெரிவித்ததாம் என்க.

மயிலை-சீனி. கோவிந்தராசன்.

கொல்லாமை

மண்ணுலகிற்பிறந்த மக்கள் யாவரும் பிறர் மாட்டு அன்பு பூண்டு ஒழுகுதல் அன்னோர்க்கு இன்றியமையாது வேண்டற் பாலதோர் சிறப்புக்குணமாம். மக்கள் உடம்பு பெற்றிருத்தல் அவர்கள் ஏனைய உயிர்கள் பால் அன்பு கொண்டொழுகுதற்கே யாம். அன்புடைமையே மானிடராய்ப் பிறந்தவர்க ளடையக் கூடிய பயன். அன்பில்லாத உடல் உயிருடன்கூடி யிருப்பினும் உயிரற்ற உடலே யாகும்.

'அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோற் போர்த்த வுடம்பு' என்பது உத்தரவேதம்.

இன்னோரன்ன குணச்சிறப்புவாய்ந்த அன்பு எவ்வெவ்விடத்தில் நிகழ்கின்றதோ அவ்வவ்விடத்தின் ஏற்றத்தாழ்விற் கேற்ப பலபெயர் பெறும். ஐங்குரவர்பால்நிகழும்அன்பை'பக்தி' என்ற உயரிய பெயராலும், மனைவியிடம் செலுத்தும் அன்பை 'காதல்' என்ற பெயராலும், மக்களிடம் கொண்ட அன்பை 'வாஞ்சை' எனும் நாமத்தாலும் வழங்குகின்றோம். அவ்வாறே, எம்மினுந் தாழ்ந்த அறிவுடைய விலங்காதி அஃறிணைப் பொருள்களிடத்து நிகழும் அன்பு கருணை அல்லது இரக்கம் என்று சொல்லப்படும். இக்கருணை, இரக்கம் என்ற இரண்டையுந் தழுவிய ஜீவகாருண்யத்தின் காரணமாகவே கொல்லாமை என்னும் நல்லறம் பிறக்கும்.

கொல்லாமை யாவதென்னெனின், எக்காரணம் பற்றியேனும் பிறவுயிர்களை வதைத்தல் கூடாதென்பதே யாம். கொல்லாமையே அறங்களியாவற்றினும் மேலாய தொன்றென்று ஆன்றோர் நூல்கள் சான்றுகின்றன. பொய்யாமையினும் மிகச்சிறந்தது கொல்லாமை. 'அறவினை யாதெனின் கொல்லாமை'

'ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று' என்பது பொய்யாமொழி.

உலகில் மனிதர்கள் செய்யாது விலக்க வேண்டியனவாய கொலை, களவு, பொய், காமம், கள் என்ற பஞ்சமாபாதகங்களினும் கொலையே வலியுடைத்தாதல்பற்றி அதனை முதற்கண் அமைத்தனர் அறிவாளர். கொலை யென்பது ஒருவனிடத்தில் பொருந்துமேல் அதுவே ஏனையநான்கு பாதகங்களையும் அவனிடத்திற் பொருத்தும், கொலையகலின மற்ற நான்கும் தமக்குத்தாமே நீங்குமென்பது திண்ணம்.

கொல்லாமை என்னும் நல்விரதம் பூண்டொழுகுபவர் உலகத்தில் நல்லவர்களாகின்றனர். அவர்களே நிலவுலகில் நீடுவாழ்

ந்து நமன் கைப்புகாமல், தனக்குவமையில்லாதான் தாளிணை யடைவார்.

'கொல்லாவிரதமொன்று கொண்டவரே நல்லோர்மற்
றல்லாதாரானோரறியேன் பராபரமே'

'கொல்லாமை மேற்கொண்டொழுகுவான் வாழ்நாண்மேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று.'

கொலையாதி நெறியகன்ற ஞானமே மேலான ஞானம்; கொலையகற்றி யியற்றும் தவங்களே நற்றவம்; கொலையின்றி செய்யும் அறமே அறம்; கொலை விலக்கியீட்டப்படும் செல்வமே உயிருக்கு இதமான வாழ்வைத்தரும் என்று ஆசாறமை புலனுடைச் சான்றோர் புகல்வர்.

'நன்றாகுமாக்க மெனினுஞ் சான்றோர்க்கு
கொன்றாகு மாக்கங் கடை'—குறள்.

இனி, கொல்லுவதினும் தன்சரீரம் வலுவேறிப் பருக்குமாறு பிறவுயிர்களைக் கொன்று அவற்றின் ஊனைத் தின்னுதல் மிகவும் பாதகமாம். அவ்வாறு பிறவுயிர்களின் தசையைத் தின்னுபவர் பரங்கருணைத் தடங்கடலாகிய பரமசிவத்தின் கருணைக்கு உரியராகார்.

'தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூ னுண்பான்
எங்ஙனமாளு மருள்' என்பது வள்ளுவர் வாக்கு.

ஆனால் சிலர், பிறவுயிர் வருந்தக் கொலைபுரிதல் குற்றமேயெனினும் பிறரிடம் விலைகொடுத்து வாங்கி உண்ணல் குற்றமாமோ எனின், அவ்வாறு செய்வதும் குற்றமே என்னை? கொள்வாரிலையெனின் விற்பார்க்கு விற்பனை யாகாதாதலின்.

'விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங்குற்றம்' என்ற நான் மணக்கடிகையார் வாக்கையும்.

'தினற்பொருட்டாக் கொள்ளாதுல கெனின்யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவாரில்.' என்றதேவர் திருவாக்கையும் கவனிக்க.

"உயிர்களைக் கொல்லச் சொன்னவன், ஊனை அறுக்கிறவன், அதனை விற்கிறவன், அதனை வாங்குகிறவன், அதனை சமைக்கிறவன், பரிமாறுகிறவன், தின்கிறவன் என்னுமிவர்களனைவரும் கொலைக்காரர்களென்று சொல்லப்படுகின்றனர்" என வடமொழி மனுஸ்ம்ருதி கூறுகின்றது.

'இனிதுண்பா னென்பா னுயிர்கொல்லா துண்பான்' என்ற முன்னோர் மொழிப்படி ஒருயிரையுங் கொல்லாது உண்பானே இனிதாக உண்பவனென சொல்லப்படுகிறது. புலாலுண்பவனே யன்றி அவனில்லில் அவனுடன் புசிப்பவனும் புலாலுண்பவனாகின்றான். எவ்வாறெனின், ஓர் புலையன் மனையில் அன்னம் புசித்த ஒருவன் புலையனாகவே கருதப்படுகின்றானன்றோ? கொல்லா விரதங்கொண்ட நல்லோ னொருவன் இட்ட அன்னம் தேவாமிர்தத்திற்கும், கொலையும் புலையுங்கொண்ட மற்றொருவன் உதவும அன்னம் விடத்திற்கும் ஒப்பாகுமென்று ஆன்றோர் நூல்கள் அறைகின்றன.

'கொலையிலா னுதவுமன்னங் கூறிற்பே ரமுதமாகுங்
கொலையுளா னுதவுமன்னங் கூறில்வவ் விடமதாகும்
புலையர்தம் மனையிலுண்பான் புலையனே யாமாபோல
கொலைஞர்தம் மனையிலுண்பான் கொலைஞனே யாவனன்றோ?'

இத்தகைய குணக்கேடுகள் பலவும் கைகூட்டி வைக்கவல்ல கொலை என்னும் கொடுந்தொழிலை மேற்கொண்டொழுகுபவர் அந்தோ! மீளாநரகிற் காளாகின்றனர்.

'கொல்லிடு குத்தென்றுகூறிய மாக்களை
வல்லிடிகாரர் வரிகயிற்றாற் கட்டிச்
செல்லிடுநீ யென்று தீவாய் நரகிடை
நில்லிடுமென்று நிறுத்துவர் தாமே!' என்றும்,

'கொன்றிலாரைக் கொலச்சொல்லி கூவினர்
தின்றிலாரைத் தினச்சொலித் தெண்டித்தார்
பன்றியாய்ப் படியிற் பிறந்தேழ் நர
கொன்றுவா ரனுபவ யிதுண்மையே' என்றும்

கூறிய திருமூலர் திருவாக்கின்படி கொலை பயின்றோரையும், கொலை பயிலும்படி பிறரைத் தூண்டினவர்களையும், கொன்றதைத் தின்றவர்களையும், தினச்சொல்லி தெண்டித்தவர்களையும் எமபடர்கள் பாசத்தாலிறுக்கி இந்நபுலக்கை கொண்டு நையப் புடைத்து, எழுநாவிடை நிறுத்தி எழுநரகத்திலும் முறையேவீழ்த்தி மாறாவேதனைகள் செய்வர் என நூல்கள் கூறுகின்றன. அன்னோர் மறுபடியும் பூமியிற் பிறக்குங்கால் பன்றியாய்ப் பிறந்து நைவார்கள்.

இனி, கல்வியும் நல்லொழுக்கமுமற்ற சில தாழ்ந்த வருணத்தார், தாம் தாம் தம் குலதெய்வங்களாகப் பாராட்டி வழி

பட்டுவருகின்ற காளி, மாரி, காட்டேரி, வீரன் முதலிய துஷ்டதேவதைகளுக்கு உயிர்ப்பலியிட்டு அவ்வேழைப் பிராணிகளின் குருதியால் மேற்சொன்ன தேவதைகளை திருப்தி செய்தால் தங்களுடைய பாவம்நீங்கி காரியசித்தியடையலாமென்ற மூடநம்பிக்கைகொண்டு எண்ணிறந்த ஆடு கோழி பன்றி எருமைமுதலிய பிராணிகளைவெட்டிப் பலியிடுகிறார்கள். அந்தோ! இது முற்றும் அறிவின்மையே! எல்லாம் வல்ல இறைவன் ஒருவனே. நம்மூதாட்டியரும் 'தெய்வம் ஒருவனே' என்று மொழிந்துள்ளார். அவனே ஆக்கவு மளிக்குவு மழிக்கவுங் கூடியவன். இச்சில்லரைத் தேவதைகளையும் ஆக்கியழிப்பவன் அவனே! அவனன்றி ஓரணுவு மசையாது, உண்மையிவ்வாறாக காட்டேரி முதலிய பேய்களைக் குலதெய்வமாகக் கொண்டு அவைகள் மனம் திருப்தியாகும்படியான காரியங்களை (உயிர்க்கொலை முதலியன) செய்தால் அன்னவை தங்கள் பிணிகளைத் தீர்க்குமென்றும், நீண்ட ஆயுள் நல்குமென்றும், இன்னோரன்ன மூடநம்பிக்கை கொண்டு அப்பேய்களுக்கு கணக்கற்ற ஆடு கோழிகளைப் பலியிட்டு தங்கள் பாவத்தை முன்னிலும் இரட்டித்து ஈசன் கருணைக்கு அபாத்திரராகின்ற அறிவிலிகளின் மதி என்னே? மேலும்.

'காலினிலூறுங் கரும்பினிற் கட்டியும்
பாலினு ணெய்யும் பழத்துளி ரதமும்
பூவினுணாற்றமும் போலுள னெம்மிறை
காவலனெங்குங் கலந்து நின்றானே' (திருமந்திரம்)

என்றபடி கடவுள் எள்ளுக்குளெண்ணேபோல் எவ்வுயிரின் கண்ணும் அவ்வவ் வுயிரையே தனக்குறையுளாகக் கொண்டு வீற்றிருக்கின்றார். ஆகவே, கொலை செய்பவரும் உயிர்ப்பலியிடுவோரும் ஈசன் சந்நிதானத்தை யழிப்பதூஉமன்றி அவன் சிருட்டிப்புக்கும் இறுதிதேடுகின்றனர். இவ்வாறு செய்வதினால் அவர்கள் இறைவன் கருணைக் கிலக்காகாது எமதண்டனைக்காளாகின்றனர்.

'எவ்வுயிரும் பாரபரன் சந்நிதியமாகுமிலங்குமுயிருடலைத்துமீசன் கோயில், எவ்வுயிருமெம்முயிர்போலென்று நோக்கியிரங்காதுகொன்றருந்துமிழிஞரை,வவ்வியமதூதரருந்தண்டஞ் செய்து வல்லிரும்பை யுருக்கியவர் வாயில்வார்த்து, வெவ்

விய தீயெழு நரகில் வீழ்த்தி மாறு வேதனை செய்திடுவ ரென வோது நூலே'

இன்னுங் கொலைப் பாதகத்தால் நெடுநாள் நரகவேதனை யனுபவிப்பது மன்றி கணக்கற்ற ஜெனனங்களெடுத்து இவ்வுலகத்திலும் பற்பல இன்னல்களை - யனுபவித்தாலன்றி அப்பாவம் தொலைத லின்றாம்.

'மேலைக்குவித்து மாகிவிளைந்தவை யுணவுமாகி
ஞாலத்துவருமாபோல நாஞ்செயும் வினைகளெல்லாம்
மேலத்தான்பலமாச் செய்யுமிதமகிதங்கட் கெல்லாம்
மூலத்ததாகியென்றும் வந்திடும் முறைமை யானே.'

சிவஞான சித்தியார்.

ஆகவே 'புலையுங் கொலையுங் களவுந்தவிர்' என்ற அருமைத் திருவாக்கை நினைந்து ஒருவன் கொலையையும் புலாலையும் அறவே ஒழிப்பானாயின் 'கொல்லான்புலாலை மறுத்தானைக்கை கூப்பி, யெல்லா வுயிருந்தொழும்,என்ற பொய்யில் புலவர் புனிதவாக்கின்படி அவன் யாவராலும் போற்றப் படுவதூஉ மன்றி எத்தனையோ ஆடுகள் கோழிகள் மீன்கள் குயில் முதலிய பறவைகள் உயிர் பிழைத்து உலகின் கண் மல்குமன்றே? இவவாறே உலகிலுள்ள யாவருஞ் செய்யத் தலைப்படின் எண்ணிறந்த உயிர்கள் ஜீவித்திருக்கும். ஆதலால் நம்முடைய உயிர்வாழ்க்கை நமக்கு இனியதாயிருப்பது போலவே எல்லாப் பிராணிகட்கும் தம் தம் உயிர்வாழ்க்கை தங்கள் தங்களுக்கு இனிப்பாயிருக்கும் (சாதலினின்னாததில்லை யுயிர்க்கு) என்பதை எண்ணி மானிடராய்ப் பிறந்த யாவரும் 'தம்முயிர்போ லெவ்வுயிருந்தா னென்று தண்ணருள்கூர் செம்மையராய்' கொலையையும் புலாலையும் அறவே விடுத்து ஜீவகாருண்யத்தினின்று சிறிதேனும் விலகாது எல்லாம் வல்ல இறைவன் றிருவருளுக் குரியவர்களாய் வாழ்வாராக.

'கொல்லா விரதங் குவலய மெல்லா மோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவ தென்னிச்சை பராபரமே'

(தாயுமானவர்)

'தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை' (குறள்)

செந்தமிழ்ச் சிறுவன்,

கூத்தப்பாக்கம்.

குடிப்பிறந்தார் குணம்

1. குடிப்பிறந்தார் குணம் என்பதற்கு உயர்ந்த குடியிலே பிறந்தவருடைய தன்மை என்று பொருள். அந்தணர் அரசர் வணிகர் வேளாளரென ஆரியர் வகுத்துவைத்த நாற் குலத்தாருள்ளும் குடிப்பிறந்தார் உண்டு. எக்குலத்தவருக்கும் குடிப்பிறப்பு இன்றியமையாத தாயே இருக்கின்றது

2 இருப்பின், இருக்கட்டும். இங்கே, அவர் குணத்தைக் கூறவந்தது யாது பற்றி? அவர் குணத்தை நாம் அறிந்துகொள்வதனால் வரும் பயன் யாது? என்றால்; மக்களாகிய நாம் சார்ந்ததன் வண்ணமாகும் இயல்புடையவர், அதாவது, நாம் பலகாலும் கண்டும் கேட்டும் பழகினோருடைய எண்ணம்சொல் செயல்களையே எளிதாகக் கைக்கொண்டு பயின்று கொள்ளும் தன்மையுடையவர். அரச குலத்திலே பிறந்த ஓர் அரசகுமாரனேயாயினும் வேடர் சேரியிலே வளர்க்கப் பட்டானாயின், தனக்குரிய குணஞ்செயல்களெல்லாம் குன்றித் தன்னை வளர்த்தோருடைய குணஞ்செயல்களையே அவன் பெரிதும் பழகிக் கொள்வான். வேட்டுவக் குலத்திலே பிறந்த ஒரு வேடமகனேயாயினும், அரண்மனையிலே வைத்து வளர்க்கப்பட்டானாயின், தன் குலத்திற்குரிய குணஞ்செயல்கள் கெட்டுத் தன்னை வளர்த்தோருடைய அரிய குணஞ் செயல்களே அமையப் பெறுவான். இவ்வாறு நமக்குரிய தன்மை மறந்து, நம்மோடு சார்ந்துள்ளவருடைய தன்மையே கைப்பற்றும் இயல்புடையவராகவே, நாம் இருக்கின்றோம் ஆகலால், நாம் செவ்விய குணமும் செயலுமுடையராய்ச் சீராகவாழ விரும்புவோமாயின், செவ்விய குணஞ் செயல்களை வாய்ந்துள்ள சீரியருடனே கூடி இடைவிடாமல் பழகவேண்டும், இவர் கூட்டமே நமக்கு எல்லா நன்மையையும் எளிதாக அளிக்கும் இவ்வுண்மையைத் திருவள்ளுவநாயனாரும்,

> “ நிலத்தியல்பான் நீர்திரிந்தற்றாகும்; மாந்தர்க்கு
> இனத்தியல்பதாகும் அறிவு”

> “ மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
> இனந்தூய்மை தூவா வரும்” என்னும் குறட்பாக்களினால் வெளியிட்டருளினார்.

3. உயர் குடிப்பிறந்தாருக்கே உயர் குணங்களெல்லாம் உரியனவாக உள்ளன; இவருக்கே அரிய தொழில்களெல்லாம் இயல்பாக இயைந்துள்ளன. ஆதலின், இவர்நட்பே நமக்கு இன்றியமையாமல் இருக்கவேண்டும் அல்லவா? நற்குண நற்செயல்களை முன்னமே நாம் வாய்ந்திருந்தோமாயினும், இவர் நட்பு

அவற்றைப் பசுமரத்தாணிபோல நம்மிடம் பதிந்துவிடும். குணஞ்செயல்களிலே நாம்குறைபட்டுக் கிடந்தோமாயினும், இவர் நட்பு நம் குறையை நீக்கி அவற்றை நமக்குக் கொண்டுவந்து கூட்டும் நமக்குள்ள நற்குணங்கள் குறைவுபடாமல் காத்துக் கொள்ளவும், நம்மில் இல்லாத குணங்களெல்லாம் முறையே எய்திக்கொள்ளவும் குடிப்பிறந்தாருடைய கேண்மை நமக்கு மிகவும் வேண்டும்.

4. ஆயின், இக்குடிப் பிறந்தாரை யாம் தெரிந்து கொள்வது எப்படி? மற்றை மனிதரைக் காட்டினும் உருவம் வடிவம செல்வம் முதலியவற்றில் இவர் மிக்கிருப்பாரோ? என்றால்; இவையாவும் புல்லியரிடத்திலும் நிரம்பிக் காணப்படும் புறத்தோற்றமே யாகும்; இவை பெரும்பாலும் குடிப்பிறந்தாரிடம் குன்றியே இருக்கின்றன. இவை இவர்க்குச்சிறந்த குணங்களாகா. மற்று, இனிச்சொல்லப்போகும் மேலான குணஞ்செயல்களெல்லாம் யாவரிடம் குறைவின்றிக் காணப்படுகின்றனவோ அவர்களே குடிப்பிறந்தாரென்று குறிப்பிட்டுத் தெரிந்துகொள்ளலாம். இம்மேலோரை வெளிப்படையாகத் தெரிந்து கொள்ளுதற்குக் கருவியாக இருக்கும் பேரறிவை நோக்கிய இவரது குணங்களை இங்கே தனித்து எடுத்துச்சொல்லப் புகுந்ததாமென்க.

5. உயர் குடிப்பிறந்தாரிடத்தில் கருத்தும் சொல்லும் தொழிலுமாகிய மூன்றும் ஒன்றையொன்று சிறிதளவும் மாறுபடாமல் ஒத்திருக்கின்றன. மனத்தொன்று வைத்துமேலொன்று காட்டும் இருமனமுடைமை இவரிடம் இல்லை. செவியளவே இனிமை செய்யும் சொல்லை இவர்சொல்ல அறியார். தம்முடைய எண்ணத்திற்கும் சொல்லிற்கும் இசைந்திராத காரியங்களை இவர் ஒருபொழுதும் செய்யார். இவற்றோடு பழிபாவங்களுக்கு நாணி நடுநடுங்குவதாகிய பெருங்குணமும் இவரிடம் உண்டு. இவையெல்லாம ஒருவர் பயிற்றுவதவேண்டாமலே இவருக்கு இயல்பாக அமைந்து விளங்குகின்றன. ஏனையோருக்காயின், இவற்றை ஒருவர் கற்பிக்கவேண்டும்; அப்படி கற்பித்த போதும் நெடுங்காலம் நிலைப்பதில்லை. இதுவே இவர்க்கும் பிறர்க்கும் உள்ள வேறுபாடு.

6 மக்கள் யாவரும் சத்துவம் இராசதம் தாமசமென்னும் முக்குணத்தினாலும் மயங்கும் தன்மையரே ஆவர், உயர்ந்தோர்க்கேயாயினும் அல்லது தாழ்ந்தோர்க்கேயாயினும் இக்குணங்கள் மாறி மாறிவந்து கொண்டே இருக்கும் இதனாலே தான் கீழான குணஞ்செயல்கள் உயர்ந்தோரிடத்திலும், மேலான குணஞ்செயல்கள் தாழ்ந்தோரிடத்திலும சிற்சில காலங்களிலே

நாம் காணும்படி நேரிடுகின்றன. உயர் குடிப்பிறந்தார் இம்மூக்குணத்தினாலே மயங்கிய காலத்தன்றி வேறு காலங்களிலே தமக்குரிய நாணம் வாய்மை நல்லொழுக்கங்களினின்று தாமாகவே சற்றும் வழுவிவிட மாட்டார்.

7. இன்னும், பிறரிடம் காண அரியனவும் இவருக்கே உரியனவுமாகிய பல குணங்கள் இருக்கின்றன. அவற்றுள், சிறந்தனயாவை? என்றால்; தம்மிடம் வறியார் சென்றபோது, அவருக்கு இவர் காட்டுகின்ற நகை ஈகை இன்சொல் இகழாமையென்ற நான்குமாம். தம்மிடம் வறியவர் வந்தால், அவருக்குத் தங்கையிலுள்ள ஏதேனும் ஒன்றைச் சிறிதளவாவது கொடுத்துதவும் குணமில்லாவிட்டாலும் இன்முகங்காட்டி அழைத்து இன்மொழிகூறி விடுத்தலும் இலராகிச் சுளித்த முகத்தோடும் கடுஞ்சொல் பேசிப் பலபடியும் இகழ்ச்சி செய்வதே உலகத்தில் பலருக்கும் வழக்கமாயிருக்கின்றது. ஆயினும், உண்மையாக உயர் குடிப்பிறந்தாரிடத்தில் இக்குணங்கள் முழுதும் மாறித்தோன்றுகின்றன. இவர், தம்மிடம் வந்த வறிஞரை முகமலர்ச்சியோடும் ஏற்கின்றார்; அவர் மனங்குளிரும்படி இன்மொழி உரைக்கின்றார்; தம்மிடம் உள்ளவற்றை ஒளியாமல் உதவுகின்றார். அன்றியும், அவரைப் பலவாறு பெருமைபடுத்தி அனுப்புகின்றார். இல்லாரை எல்லாரும் எள்ளி யெள்ளி இகழ்வாராயினும், குடிப்பிறந்தார் மட்டும் அவரை அவ்வாறு செய்வதில்லை.

8. இனி, இக்குடிப் பிறந்தார் வறுமையடைந்து தம் நிலையிற்குன்றிய போதும், தமக்குரிய சீரிய குணவொழுக்கங்களினின்றும் சிறிதாயினும் சிதைந்து குன்றுதல் அரிது. கோடானுகோடி அளவாக்குவிந்து பொருள் வருவதாயிருந்தாலும் தம் நல்லொழுக்கம் கெடுவதற்குக் காரணமாகிய தொழில்களை இவர் ஒருபோதும் செய்யார் தம் இயற்கையினின்று எள்ளளவும் நீங்கார். தம்மனம் மொழிமெய்களிலே சற்றும்மாறுபடார். தாம் பிறந்த குடிக்குக் குறை சொல்வருமே என்றஞ்சி நன்னெறி விட்டு விலகி நடவார். பொருள் ஈட்டலைக் கருதித் தமக்குப் பொருந்தாத தொழில்களைச் செய்யத் தொடங்கார்.

9. இவர் வறுமையுள்ள காலத்தும், தம் குணஞ்செயல்களில் குன்றாமல் இவ்வாறு நடந்து கொள்ளுதல் இவர்க்குப்பெரிதும் கடமையாம். எப்படி யென்றால், வான் விளங்கும் வெண்மதியிலே உள்ள மறுவானது, தான் சிறியதாயிருந்தும், உலகமெங்கும் பரந்து ஓங்கித் தோன்றுகின்றதன்றோ? அதுபோல இவர் தொல்புகழ்வாய்ந்த நற்குடிப்பிறந்தாராகையின், இவரிடம் காணப்படும் மறுவும், தான் சிறியதே யென்றாலும், உலகத்தில் மிகமிகப் பரந்து வெளிப்படும்.

10. மேலும், கடுமுகம் கடுஞ்சொல் கொடாமை முதலிய அன்பில்லாக் குணங்கள் கீழானவரிடம் தோன்றுவன. இவை இக்குடிப் பிறந்தாரிடம் இருக்கக் கண்டால், இவர் குலத்தவரோ, அல்லரோ, என்று உலகம் ஐயப்படும். இவ்வகைப்பழி, தம் குலத்திற்கும் குடிக்கும் வருவதை யஞ்சித் தம் குணத்திற் குன்றுதிருத்தல் இவர்க்குக் கடப்பாடாயிற்று.

11. குடிப்பிறந்தாருடைய குணங்கள் பல உள. இங்கே, அவையெல்லாவற்றையும் எடுத்துரைக்க வேண்டுமோ? சுருங்கச்சொல்ல வேண்டுமாயின், இன்னும் இரண்டு குணங்கள் இவருக்கு உண்டு. அவை இன்சொல்லும் பணிவுமாம். தம்மிடம் பேசுவோர் எவ்வளவு தாழ்ந்தோராயினும், இனிமை உண்மை பணிவுமுள்ள சொற்களையே இவர் பேசுவர். இவர் வாயில் வன்சொல் காணக்கிடையா. தாம் பணியத்தக்கவரைக் கண்டால், இருந்த இடத்தினின்று எழுந்து நிற்பார். தம்மை நோக்கிஅவர் வரின், எதிர்கொண்டு ஏற்று முகமலர்ச்சியோடும் இனியனகூறி அழைத்து வந்து இருக்கை கொடுத்துப் போற்றுவர். தம்மை விட்டு அவர் போகின்றபோது பின்னே சிறிது கூடநடந்து, அவர் விடைபெற்ற பிறகே திரும்புவார். இவ்வரிய ஒழுக்கங்களை ஒரு பொருளாக மதிப்பதும் இல்லை மற்றையோர்!

> " கல்லாமை அச்சம்; கயவர் தொழிலச்சம்;
> சொல்லாமை யுள்ளுமோர் சோர்வச்சம்-எல்லாம்
> இரப்பார்க்கொன் றீயாமையச்சம்; மரத்தாரிம்
> மாணக் குடிப்பிறந்தார். "

12. இதுவரையும் சொல்லிப் போந்தவற்றால், மக்களாகிய நாம் சார்ந்ததன் வண்ணமாகும் தன்மையரெனவும்; ஆதலின், சீரிய குணவொழுக்கமுடையாரைச் சேர்ந்தொழுக வேண்டுமெனவும்; உயர்ந்த குடியிற் பிறந்தாருக்கு மனம் மொழி மெய்களில் மாறுபடாமல் இருத்தலும்,பழிபாவங்களுக்கு நாணுதலும் நாணம் வாய்மை நல்லொழுக்கங்களில் தவறாமல் நிற்றலும்,நகை ஈகை இன்சொல் இகழாமை என்னும் நாற்குணமும் வறியாருக்குக் காட்டலும்,தாம் வறுமையுற்றபோதும், தம் குடிக்குவரும் குறை சொல்லை அஞ்சித் தம் குணஞ்செயல்களில் குன்றாமல் நடத்தலும், யாவரிடத்திலும் எக்காலத்தும் நயந்த மொழியும் பணிந்த செயலும் உடைமையுமாகிய இவை யாவும் இயல்பாக ஈண்டி உள்ளன எனவும் குடிப்பிறந்தார் குணமும் அதனை அறிதற் பயனும் ஒருவாறு தெரிவித்ததாமென்க.

மயிலை கிழான்.

உபாத்தியாயர் யார்

(2-வது-புத்தகம் 353-ம் பக்கத்தொடர்ச்சி)

மாணுக்கர்களுக்கு சொல்லுந் திறமையுடையவ னிருப்ப தில் கடுமையாகவே யிருக்கவேண்டு மென்று எண்ணக்கூடாது. அப்படி நினைத்து போதிக்கப் போனுர்களே யாயின் அவர்க ளிடமிருந்து ஒரு பதமும் கிரகிக்க முடியாது. இதற்கு அடை யாளமாக ஒரு சிறுகதை சொல்லுகிறேன். யான் 1904-வரு டம் ஆடிக்கிருத்திகைக்கு திருத்தணிகைக்கு போயிருந்தேன். அப்போது திருத்தணிகைக்கும் அரக்கோணத்திற்கும் இடை யேபோகும் நடைபாட்டையில் ஒருவிசாலமான மைதானத்தில் ஒரு பெரியார் உட்கார்ந்து கொண்டிருந்தார். அப்பெரியாரை திருத்தணிகைக்கு நடந்துபோகுஞ் ஜனங்கள் யாவரும் அவரை சுற்றி வலம்வந்து கும்பிட்டு விட்டு, அவரிடத்தில் அவர்களுக்கு வேண்டிய விருப்பத்தைக் கேட்டறிந்து போவதுவழக்கம். அப் போது யானும் அவரைச் சுற்றி வலம்வந்து 'அடித்தால் நோகி றதே என்' என்று பள்ளியில் எனக்கு நேரும் கஷ்டத்தைப் பற்றி அவரைக் கேட்டேன். அப்போது என்றும் சிரிக்காதவர் சிரித்துக்கொண்டே எனக்கு"ரத்த மிருந்தால் நோகும்"என்று விடையளித்தார். நான் மறுபடியும் வீடு திரும்பும் போதும் அவரை அன்போடு வலம் வந்து தரிசித்தேன். அப்போதும் அவர் முகம் பொன் முகம்போல் காணப்பட்டது இவ்வளவு பேர் போய் அவரை தரிசித்துக் கேட்பதற்குக் காரணம் அவ ரது விலாசமான முகமே, அவர் கடூரமாயிருந்தால் அவரை அணுகுவார்களோ? இக்கதையால் பொறுமை வேண்டு மென் பது பெறப்பட்டது.

இதனுல் உபாத்தியாயருக்குப் பொறுமை வேண்டும்.இவர் நல்ல உபாத்தியாயர் என்பது சிறுவர்கள் வெளியேவந்து பேசி க்கொள்ளும் கருத்தினுலேயே நன்குவிளங்கும். உபாத்தியாயர் எப்போதும் தாயை ஒத்தவர். ஏனென்றுல் 1-பிள்ளைகளின் குறை குணங்களை யறிகிறுர். 2-அவர்களுக்குண்டாகும் வியாதி களை தனக்குத் தெரிந்த அவிழ்தங்களால் தீர்ப்பார். 3-அவர் கள் அறியாமல் செய்யும் குற்றங்களை கண்டிக்கிறுர். 4-தான் வெளியே போகும்போது அவர்களையுமுடன் கொண்டு பலவித இயற்கை,செயற்கை யமைப்புகளை காட்டுகிறுர். 5-அவர்களுக்கு தக்கவயதில் ஜீவனுேபாயஞ் சம்பாதித்துக் கொடுக்கிறுர். 6-

சபையில் அஞ்சாமல் பேசகற்பிக்கிறார். 7-தானெழுதும் நூல்களுக்கு பிழைத்திருத்தம் போடச் செய்கிறார், அந்நூலை ஒருமுறைக் கிருமுறை வாசிக்கச்செய்து அப்புத்தகத்திற்கு சாத்துக்கவி அல்லது சிறப்புப் பாயிரம் எழுதச் செய்கிறார். 8-தன்மாணாக்கனையே அவனறிந்திருக்கும் நூல்களுக்கிணங்க ஒரு வழிநூலை எழுதச் சொல்லுகிறார். 9-அரங்கேற்றத்தில் அந்நூலின் மதிப்பை அம்மாணவன் முன்பாக வெளியிடுகிறார். 10-வாத சபையில் முன்னின்று காக்கிறார். 11-பொது சபையில் பரீக்ஷையாக அனுப்பி ராஜாங்கபட்டப்பெயர் பெறச்செய்கிறார். மாணவர்களோடு இருக்கும் உபாத்தியாயர் தண்ணீரில் கலந்த உப்பு குறைவும் உயர்வுமில்லாமல் காணப்படுவதுபோல இவரும் காண்கிறார்.

நீதிமொழி

அன்பை வளர்த்தல் ஆன்றவர் கடமை
இறைவனைப் பணிதல் எவர்க்குங் கடமை
உற்றவை மொழிதல் உத்தமர் கடமை
ஐம்புலனடக்கல் அருந்தவர் கடமை
கேண்மையை விளைத்தல் கீர்த்தியர் கடமை
சினத்தைத் தவிர்த்தல் தெள்ளியர் கடமை
ஞாலங் கடிதல் ஞானியர் கடமை
தன்மம் புரிதல் தக்கார் கடமை
நன்றியைக்கருதல் நல்லவர் கடமை
பன்னூற்பயிறல் பண்டிதர் கடமை
புலாலையகற்றல் புண்ணியர் கடமை
பெண்மயலொழித்தல் பெரியார் கடமை
வறிஞர்க்களித்தல் வண்மையர் கடமை
ஆக்கைக்கழகு ஆசிலாத்துணைவர்
இல்லிற்கழகு எழின்மனையாட்டி
ஈகைக்கழகு எள்ளாதளித்தல்
கிணற்றிற்கழகு கிளர் தேம்படுநீர்
சான்றோர்க்கழகு தமரரவணைத்தல்
தகையோர்க்கழகு தற்புகழிறுத்தல்
நற்சபைக்கழகு நலங்கெழுபுலவர்
பிள்ளைகட்கழகு பெற்றோர்க் கடங்கல்
மக்கட்கழகு மனத்தெழு பக்தி
மதியுளார்க்கழகு வருமுறையுணர்தல்
மடந்தையர்க்கழகு வளங்கிளர்கற்பு
மாநகர்க்கழகு மணிநீர்த்திரை நதி
வாணிகர்க்கழகு வருவாய் வேட்டல்
வீரர்க்கழகு வென்றியை விரும்பல்

தென்காசி, ச. மாடசாமிப் பண்டாரம்.

கல்வி

அலைகடல் சூழ்ந்த அவனியில் சின்னாட்பல்பிணி மாக்கட்குள்ளபுருடார்த்தங்களாகிய அறம் பொருளின்பம் வீடெனும் நான்கனுட் பொருளே சிறந்ததாம். அப்பொருளுளதானால் மற்றைய மூன்றுந்தானே வலிநிற் கிடைக்கும். அப்பொருள் கல்விப்பொருள் செல்வப் பொருளென இருவகைத்து. அவற்றுள் கல்வியாவது ஒருவன் தான் கற்றற்குரிய நூல்களைக்கற்றல், அவையாவன அறநூலும், நீதிநூலும், யானை, குதிரை, தேர், படைக்கலமென்றிவற்று நூல்களும், சிற்பம், சோதிடம், தர்க்கம், ஆயுள்வேதம், கணிதம், வியாகரணம், சங்கீதம் பரதம் முதலியனவாம். இவைகளை யொருவன் கற்றுலக் கல்வி தனக்கேயன்றிப் பிறருக்கும் பயன்படும். அங்ஙனங் கற்குமிடத்துக் கற்கத்தக்கவைகளைக் குற்றமறக்கற்று மேற்சொல்லிய நூல்களில் கூறியவண்ணம் ஒழுகல் நன்று. உலகத்தில் கற்றோனையே கண்ணுடையானென்றும், அல்லானைக் கண்ணெனும் புண்ணுடையானென்றும் ஆன்றோர் கூறுகின்றனர். அவனுக்கு எந்த தேசமும் தன் சொந்த தேசம்போலவே பயன்படும். அவன் கழறுஞ்சொற்களுக்கு அரசர் முதலியோரும் விருப்புறுவர். அவனை யெழுபிறப்பினும் அக்கல்வி தொடரும். அக்கல்வியைக் கற்குந்தோறு மணற்கேணி கல்லாறூற்றுச் சுரத்தல்போல் நல்லறிவு விளங்கும். ஒருவன் காகபக்ஷம் சிகை முதலியவற்றாலும் உயர்ந்த வஸ்திரங்களாலும் கஸ்தூரி புனுகு சந்தன முதலியவற்றாலழகு செய்தலில் கல்வியாலழகு செய்து கொள்ளல் நன்று. அது இம்மை மறுமைப்பயன்களைத்தரும், கொடுக்கக் குறையாது, தங்களைச் செவ்விதின் விளங்கச்செய்யும், பின்வருங் காரியங்களை முன்னறியச் செய்யும், மனமயக்கத்தை நீக்கும், கிழானவனாயினும் உயர்ந்தாரிடத்து வைப்பிக்கும், கள்ளரால் கவரப்படாது, புறங்கடை நல்லிசையை நாட்டும். கற்றறிந்த மகனுக்குக் கல்வியே பெண்டீர், அவனாற் செய்யப்படும் செய்யுளே புதல்வன், தன்னை விரும்பிக் கேட்போர்க்கு அறிவுறுத்தும் சொல்லின் வளமே செல்வம், அங்ஙனம் கற்றானுக்குப் பிரமனு மிணையல்லன். எப்படியெனின், இப்புலவனால் செய்யப்படும் நூல்கள் நிறைவுலகத்தில் தங்கி விளங்கல்போல் அப்பிரமனால் செய்யப்படு முடம்புகளழிதலின்

றியில்லை. யாவனொருவன் கற்கப்புகுகின்றானோ அவன் அக்கல்வியையாராயாது படிக்கின் அது அவனிடத்தில் தங்காது. இங்ஙனம் கற்றவோர் புலவன் சலமிலாப் புலவர் மிக்க சபைக்கணிருந்து அவையலங்கரிப்பானேல் அவன் பெறுநதென்? அங்ஙனஞ் செல்லாது அச்சங்கத்தைக் கண்டபோதே மெய்குலைந்து நடுங்குவானே லவன் கல்விகற்றதிலுங் கல்லாமையே நன்று. அக்கல்வியை நெடுநாள் கற்று கற்றோர்முன் பயன்பெறச் செய்யாவிடி னென்பயன்? இங்ஙனங் கற்றோரையும் அவைக்கணலங்கரிக்குந் தலைமகன் தன்னருமை பெருமையறியா மூடருக்குப் புத்திபோதிக்காது அவர் பொருள் பெறுது அம்மூடர் தம்மையேதேனுஞ் சில காரணத்தால் வாய் மதம்பேசினும் பொறுத்து நல்லோர் சிறப்பைத் தூற்றியவர் குற்றத்தை மறைத்து தன்னைப் புகழாது விலக்கிய வோம்பி விதித்தன செய்து நமக்கேயெல்லாந தெரியுந் தெரியும் மற்றோர் குற்றமுடையாரெனச் செருக்கடையாமல் இனிய சொலலுடையனாய் வருந்திக்கற்ற பலநூல்களையுமோதி யுணர்ந்து உலோபராகிய மனிதரை நாவால் பாடாது கடவுளைப் பாடி அவரால் திருவாய் மலர்ந்தருளப்பட்ட வேதாகமங்களின் புகழை விரித்தொழுகின் இம்மை மறுமைப்பயன்களை யடைவன் சுபம்! சுபம்!!

அலகுசால் கற்பினறிவு நூல்கல்லா
துலகநூலோதுவ தெல்லாம்-கலகல
கூஉந்துணை யல்லாற்கொண்டு தடுமாற்றம்
போஒந்துணையறிவாரில், —நாலடியார்.

“கற்றதனாலாயபயனென் கொல்வாலறிவ
னற்றாடொழாரெனின்.” —திருக்குறள்.

கல்லாத மூடரைக் காணவு மாகாது
கல்லாத மூடர்சொற் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லாராங்
கல்லாத மூடர்கருத் தறியாரே. —திருமந்திரம்.

மெய்த்ததிரு வள்ளுவனார் வென்றுயர்ந்தார் கல்விநலந்
துய்த்தசங்கத் தார்தாழ்ந்தார் சோமேசா—வுய்த்தறியின்
மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரணைத்திலர் பாடு. —சோமேசர் முதுமொழி வெண்பா.

நாம்யார்

28ம் பக்கத்தொடர்ச்சி

மலநீங்க வுபாயம்

தேகமுள்ளபொழுதே இந்நிலையுண்டு. மலமறைப்பினாலே இவை நிகழுகின்றன. ஸ்ரீமந், மணிவாசகப்பெருமானுக்குத் திருவடி தீக்ஷைபுரிந்தருளிய பரமாசாரியராகிய ஈசுவரன் உபதேசித்த அரிய பாசுரம் இப்பொழுது ஞாபகமாகின்றது. அஃது "களிம்பு தோய்ந்த செம்பெனவுனை மருவுங் கருமைகூர்மலங் கண்டதுகலக்கும், பளிங்கு போன்ற துன்மனம் மலப்பற்றினாலுடல்பல வெடுத்துழன்றாய்" என்னும் பாகமாகும். இதனாலே தேகம் எப்பொழுது கிடைத்ததோ அப்பொழுதே ஆன்மாக்களுக்குப் பாசமுகிழ்ப்பு உண்டாய்விடும். பாசத்தை நசிக்கச்செய்வது சிவத்தியானமேயாகும். சிவத்தியானத்தினாலே ஆன்மாக்கள் சிவாநந்தப் பெருவாழ்வடையும். சிவம் என்றும் விகாரமடையமாட்டாது. ஆன்மாக்கள் விகாரமாந் தன்மையுடையன. உடல் பொருள் ஆவி ஆதியன யாவுந் தேவரீருடையனவே என்று அர்ப்பணஞ் செய்தல்வேண்டும். இதனாலே சிவபோதவளர்ச்சி தலைப்படும். சிலர், பதியும் பசுவும் ஒன்றென்பர் சிவமும் ஆத்மாக்களும் வேறானவைகளே! சிவ சீவ பேதமுணர்ந்து வழிபட்டால் நிர்மலப்பொருளாகிய இறைவனை ஆன்மாக்கள் சேர்ந்து சுகமடைய ஏதுவாகும். முதலிலே நான் பிர்மம் என்றால் வளர்வது அகங்காரமேயாகும். 'ஸ்ரீமந். மணிவாசகப் பெருந்தகையாரது அருந்தேறல்வாக்கைச் செவிமடுத்து இன்பமடையாத பிறவி'பிறந்ததா 'பேசாத நாளெல்லாம் பிறவாநாளே' என்றபடியே!

"வான்கெட்டு மாருதமாய்த் தழனீர்மண் கெடினுந், தான்கெட்ட லின்றிச சலிப்பறியாத் தன்மையனுக்கு, ஊன்கெட் டுயிர்கெட் டுணர்வுங்கெட் டென்னுள்ளம் போய், நான்கெட்டவா பாடித் தெள்ளேணங் கொட்டாமோ"

இந்தத்திருவாசக அனுபூதிவாக்கு எவ்வளவு பெருமைவாய்ந்திருக்கின்றது!

சிற்றின்பம்.

இவ்வுண்மைகளை ஆராயப்போதிய அவகாசம் எங்களுக்குக்கிடைப்பதில்லை. நடைப்பிணம்போல இருப்பதை நாங்கள் சிந்திப்பதில்லை. சிற்றின்பங்களை மிகவும் நாங்கள் மதிக்கின்றோம். சிற்றின்பமென்வே பேரின்பமு மொன்றுண்டென்பதைக் கனவினும் நினையாமை அறிவின்மையே! பேரின்பமே ஆன்மாக்களடையவேண்டியது. சிற்றின்பம் இழிவுடையது. அஃது,

"அடுகரி தொடரவீழ வைந்தலை நாகங் காண,
இடிகரை கிணற்றின் வேரைப் பற்றி நான்றிட அதையு மோரெலி,
கடுகவே வந்துகறித்திட வொருதுளி தேனக்கின்பம்,
போலுமிப் பிறவியின்பம்..........."

"மங்கையர்தம் யோனிமிசை வைத்திடுமாசைதனைப்
பங்குசெய்து பற்றிலொரு பங்கெடுத்துத்—திங்களணி
மேனியன்றன் பாதாரவிந்தத்தில் வைத்தக்கால்
கானலாங் காணுக்கதி."

கடவுளை யடையும் வழி

ஆகவே, மானுடர்களாகிய நாங்கள் கடவுளை மனம் வாக்குக் காயம் என்ற மூன்றினாலும் வழிபாடு செய்து, ஆசையை நீக்கவேண்டும். ஆசை யகன்றால் ஆத்மஞானமுண்டாகும். ஆத்மஞானத்தினாலே உலகத்திலுள்ள நித்த அநித்தப்பொருட்களை யுணரச் சிவஞானங்கை கூடும். சிவஞானத்தினாலே பேரின்பங் கிடைக்கும் நாம் மென்றது ஆன்மாக்களை. தேகமும் ஆத்மாக்களும் வேறாயுள்ளன. பதி பசு பாச ஞானங்களினாலே உணரக்கூடாத முதல்வர் இவைகளைக் கரதலாமலக மென்னத்தொண்டர்களுணர்வார்கள். ஆத்மா சதசத்தன் என்பதை, வாதவூரடிகளும்,

"சிந்தனைநின் றனக்காக்கி நாயினேன்றன் கண்ணிணைநின் திருப் பாதப் போதுக்காக்கி, வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்மணி வார்த்தைக் காக்கி யைம்புலன்க ளார, வந்தெனையாட் கொண்டுள்ளே புகுந்தவிச்சை மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத், தந்தனை செந்தாமரைக்கா டனையமேனித் தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே."

என்று தெளிவுறத் தெரிவித்தருளினார். இதனாலும் ஆன்மாவின் நிலைமை அறிவுடையார்களுக்குக் கிரித்தீப மென்னத் திகழுதற்பான் மைத்தே! இனி ஆன்மாக்களைச் சிவபெருமான் மற்கட சடபந்தமாகவும், மார்ச்சாரசம்பந்தமாகவும் அடிமைக்கொண்டருளுவார். ஆகலின் தம்மையுணர்ந்து தலைவனைப் பத்தியாற் பரவினால், பிறவிப் பிணியினின்றும் நீங்கி இன்புற் றிருக்கலாம்.

"பிறவிப் பெருங்கடனீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்."

உபசம்ஹாரம்.

அன்பர்களே! இதுவரையும் சிற்றறிவுடையேன் உபந்யாசமாகவும், பிரசங்கமுறையாகவும் பேசியவற்றின் றிரட்டுரை யாதெனில்:

நாம் என்றது ஆத்மாவென்றும், ஆத்மாக்கள் தேகத்தோடு கூடி நல்வினை தீவினைகளைச் செய்யும் என்றும், இருவினையொப்பும் மலபரிபாகமுமடைந்த ஆன்மாக்களே மோக்ஷமடையும் என்றும், தேகம் இந்திரியாதிகள் ஆத்மாக்களன்று என்றும், ஆசையைப் படிமுறையானே குறைத்துப் பக்தியைப் பெருக்கிச் சிவபெருமானை வழிபட்டாற் பிறவி நீங்கும் என்றும், பிறவியை எடுத்த ஆன்மாக்கள் பாசப்பற்றுடையன வாகும்என்றும், ஆன்மாக்களுடைய பிரயோஜனத்தையே திருவுளத்திற் கொண்டு திருவருள் பாலிப்பவர் நியந்தாவாகிய கடவுளே என்றும், கடவுளுக்கு வேறாய்த் தேகத்துடன் வாழும் நாட்களில் ஜீவகாருண்ணியம், சத்யம் முதலிய தர்மங்களை யாவரும் ஆற்றிவரவேண்டியது அவஸ்யமாகும் என்றும் சுருக்கிக் காட்டப்பெற்றமை யறிக. சுகானந்தத்தைப் பெறமுன்னிற்பது மனிதஜன்மசாபல்யமாகும். அதிகம் விரிப்பிற் காலவெல்லைகூடுமாகலின், இவ்விஷயத்தை இவ்வளவிலே சுருக்கிப் பூர்த்திசெய்கிறேன். திருச்சிற்றம்பலம் சுபமஸ்து.

அன்பைப்பெருக்கி யெனதாருயிரைக்காக்கவந்த
இன்பப்பெருக்கேயிறையே பராபரமே.

வ.மு. இரத்நேசுவரையர்,
தமிழ்ப்பண்டிதர்.

சங்க நூல்

(2-வது-புத்தகம் 239-ம் தொடர்ச்சி)

“வசையில் புகழ் வயங்கு வெண்மீன்
* றிசை திரிந்து தெற்கேகினும்
தற்பாடிய தளியுணவிற்
புட்டேம்பப் புயன்மாறி
வான்பொய்ப்பினுந் தான் பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன் கொழிக்கும்
விளைவறா வியன் கழனிக்
கார்க்கரும்பின கமழாலைத்
தீத்தெறுவிற் கவின்வாடி
நீர்ச்செறுவி னீணெய்தற்
பூச்சாம்பும் புலத்தாங்கட்
காய்ச்செந்நெற் கதிரருந்து
மோட்டெருமை முழுக்குழவி
கூட்டு நிழற் றுயில்வதியுங்
கோட்டெங்கிற் குலைவாழைக்
காய்க்கமுகிற் கமழ்மஞ்ச
ளினமாவி னிணர்ப்பெண்ணை
முதற்சேம்பின் முளையிஞ்சி
யகநகர்வியன் முற்றத்துச
சுடர்நுதன் மடநோக்கி
னேரிழை மகளிருணங்குணாக் கவருங்
கோழியெறிந்த கொடுங்காற் கனங்குழை.”

பட்டினப்பாலை.

ஐந்தாவதாகிய முல்லைப்பாட்டுக் காவிரிப்பூம் பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார் பாடியது. இது 103-அடிகளை யுடையது இதினின்று சில அடிகளை அடியிற்காண்க.

“நனந்தலையுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறிக்க மாதாங்கு தடக்கை
நீர்செல்நிமிர்ந்த மாஅல்போலப்
பாடிமிழ் பனிக்கடற்பருகி வலனேர்பு
கோடுகொண்டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை
யருங்கடி மூதூர் மருங்கிற்போகி
யாழிசை யினவண்டார்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
யரும்பவிழலரி தூஉய்க்கை தொழுது

பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்
சிறுதாம்புதொடுத்த பசலைக் கன்றி
னுறுதுய ரலமரனோக்கியாய்மக
ணடுங்கு சுவ லசைத்தகையற் கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின்றுய்த்தர
வின்னே வருகுவர் தாயரென்போ
ணன்னர் நன்மொழி கேட்டன மதனா
னல்ல நல்லோர் வாய்ப்புட் டெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருக றலைவர்வாய்வது நீநின்
பருவர லெவ்வங்களைமா யோய்."

ஆறாவதாகிய மதுரைக்காஞ்சி மாங்குடி மருதனார்பாடியது. இதனாற்பாடப்பட்டோன் தலையாலங்கானத்துச்செருவென்ற பாண்டியன்-நெடுஞ்செழியன். ஆரியப்படைதந்த பாண்டியன்-நெடுஞ்செழியன் இவனின் வேறானவன். இது 782-அடிகளையுடையது. இதினின்று சில அடிகளை அடியிற்காண்க.

"ஓங்குதிரை வியன் பரப்பி
னொலிமுந்நீர் வரம்பாகத்
தேன் றூங்கு முயர்சிமய
மலைநாறிய வியன்ஞாலத்து
வலமாதிரத்தான் வளிகொட்ப
வியனாண்மீ னெறியொழுகப்
பகற்செய்யுஞ் செஞ்ஞாயிறு
மிரவுச்செய்யும் வெண்டிங்களு
மைதீர்ந்து கிளர்ந்துவிளங்க
மழைதொழி லுதவமாதிரங்கொழுக்கத்
தொடுப்பி னாயிரம் வித்தியது விளைய
நிலனு மரனும் பயனெதிர்பு நந்த
நோயிகந்து நோக்குவிளங்க
மேதக மிகப்பொலிந்த
வோங்குநிலை வயக்களிறு
கண்டுதண்டாக் கட்கின்பத்
துண்டுதண்டா மிகுவளத்தா
னுயர்பூரிம விழுத்தெருவிற்
பொய்யறியா வாய்மொழியாற்
புகழ்நிறைந்த நன்மாந்தரொடு
நல்லூழி யடிப்படரப்
பல்வெள்ள மீக்கூற
வுலகமாண்ட வுயர்ந்தோர்மருக.!" —மதுரைக்காஞ்சி.

கா. ர. கோவிந்தராஜ முதலியார்
பச்சையப்பன் காலேஜ் பண்டிதர்.

பிரதாபன்

அல்லது

நட்புமுறை பிறழ்ந்த நண்பன்

இருபதாம் அத்தியாயம்

ஓர் இருண்ட அரண்யம்

* * * *

* * * *

காரிருள் படர்ந்த ஒரு கானகம்.

ஆதித்தன் அஸ்தமிக்கும் அமயம். சித்திரப்பட இலேககனும் எளிதில் வரைவதற்கியலா விதவிதமான வர்ணங்களுடன் மேகங்கள் மேற்றிசையில் விளங்கின. வானுற வோங்கி வளர்ந்து நின்ற விருக்ஷங்களாலும் குறவரும் மருளுங் குன்றங்களாலும் கீழ்த்திசையில் உண்டான நீண்ட நிழலால் அக்கானகத்தில் இருள் மிகுந்தது. பறவைகள் தத்தம் கூடுகளை நோக்கிச் சென்றன. கூழாங் கற்களுக்கூடே காறுறுகள் ஒருவித கானனந்த ஒலியுடன் குதித்துக் குதித்துச் சென்றன. இரை தேடும் பொருட்டு காட்டு மிருகங்கள் அநேகம் குகைகள், புதர்கள் முதலியவற்றினின்று ஆரவாரத்துடன் வெளிக்கிளம்பின. மலைப்பாம்புகள் மணலில் புரண்டு புரண்டு போயின.

அத்தருணத்தில், "அந்தோ! நான் பெண்ணாய்ப்பிறந்து இவ்வளவு துன்பம் இதுவரையில் அநுபவித்ததில்லை. எனினும், என்னருங் காதலர் பொருட்டு நான் படுந் துன்பம் இன்பமாகவே எனக்குத் தோன்றுகிறது. ஆஹா! சாவித்திரி தன் நாயகனின் உயிரை மீட்க இயமனுடன்போராடிய வண்ணம் காடுமலை வனாந்தரங்கள் கடந்து செல்லவில்லையா. அவளடைந்த கஷ்டத்தின் முன் இக்கஷ்டம் எம்மாத்திரம். யோசிக்குமளவில் இது கஷ்டமேயல்ல. ஒருத்திக்கு இஷ்டத்துடன் தான் எடுத்துக்கொண்ட காரியத்தில் கஷ்டம் தோன்றுமோ—தோன்ருது. என் மணாளரை எப்போது காண்பேன்—எப்போது அவரை என் மனங்குளிரக் கட்டியணைப்பேன். (மௌனம்)

"நான் என்னருந் தந்தையை விடுத்து ஒரு மாத காலமாயிற்று. என்னைக் காணாததால் அவர் மனம் எவ்விதம் வருந்துகின்றதோ. நான் தலையணைக்கடியில் வைத்த நிருபத்தைப் பார்த்திருப்பாரோ. அப்படிப் பார்த்திருந்தால், ஆட்களை அனுப்பி என்னைத் தேடச் சொல்லியிருப்பாரல்லவா. இன்னும் ஆட்கள் ஏன் வரவில்லை. ஒரு வேளை வழி தெரியாமல் தடுமாறுகின்றனரோ.

"ஆஹா, பிரதாபவீரர் மீது எனக்கிருக்கும் காதலின் வலிமையன்றோ என்தையையும் விடுத்து அவரைத்தேடி வரச் செய்தது. காதலின் தன்மை என்னே! அதனால் முடியாத காரியம் இவ்வுலகில் என்னவிருக்கிறது.

"நான் ஆணுடை தரித்திருந்தும் ஓர் ஆண் பிள்ளைக்கிருக்கும் ஆண்மையும் வீரியமும் இன்றி இருக்கிறேன். இவ்விருண்ட கானகத்தில்

---

* இந்நாவலின் காபிரைட் இதன் ஆக்கியோன் நாகபூஷணத்திற்குரியது.

துஷ்ட ஜந்துக்களின் ஆரவாரத்தால் நானடையுந் திகில் அளவிடக் கூடாததாயிருக்கிறது. என் காதலன் பொருட்டு நான் உயிர் துறக்க நேரிடினுஞ் சரியே" என்று ஆணுடை தரித்த லலிதை தன்னந் தனியே உட்கார்ந்து எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிக்கொண்டிருந்தாள்.

இருள் பரந்தது. அவ்விருட்டைக் கிழித்துக்கொண்டு சந்திரன் தாரகைகள் புடை சூழ ஆகாயத்தில் தோன்றினன். காடு முழுவதும் ஒளி வெள்ளத்தில் முழுகி நின்றன. அங்கிருந்த எரிகளெல்லாம் உருக்கி வார்த்த சுவர்ணம் போல் மின்னின. "உனக்கு நற்காலம் வந்தது. இனி நீ அஞ்சாதே, நங்காய்!" என்று இயற்கை தேவி லலிதையை நோக்கிக் கூறியதே போல் அவ்வினிய காட்சியால் தோன்றிற்று.

அச்சமயம், மனிதனொருவன் தடியொன்று கையிலேந்திய வண்ணம் அவ்வனிதையை நோக்கி வந்தான்; அவளைக் கண்டு, "ஐயா, ரஜபுதனத்துக்குப் போகும் மார்க்கம் இதுவோ?" என்று வினவினன்.

லலிதை;—நானும் உன்னைப்போன்ற ஒரு வழிப்போக்கன். உன்னைப்போலவே நான் ராஜபுதனத்துக்குப்போகிறேன். வாபுறப்படலாம்.

வழிப்போக்கன்:—சரி.

இருவரும் மௌனஞ் சாதித்தவர்களாய் சிறிது தூரஞ்சென்றனர்.

லலிதை:—ஐயா! நீர் ரஜபுதனத்தில் யாரிடஞ் செல்கிறீர்?

வழிப்போக்கன்:—காவிரிப்பூம் பட்டினத்தில் சுகுண சுந்தரரின் புதல்வி தன் காதலனைத் தேடிக்கொண்டே ரஜபுதனத்திற்குச் சென்றுளாம். அவள் பொருட்டு அவளுடைய தகப்பனர் படுந் துன்பம் இவ்வளவு அவ்வளவல்ல. அவர்தான் என்னை அனுப்பி அவளைக் கண்டு பிடிக்கக் கட்டளையிட்டார். நான் அவளைக்கண்டு பிடிக்க ரஜபுதனத்துக்குச் செல்கிறேன். அவர் புதல்வி சுந்தரவதி; நற்குணம் மிகுந்தவள். அவளுக்குத் தன் காதலன் பிரதாபன் மீதிருக்கும் ஆசை மிகுதியால் தகப்பனையும் விட்டுப்பிரிந்து வந்தாள். ஆனல், காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள ஜனங்கள் அவள் எவனையோ அழைத்துக்கொண்டு வெளியேறி விட்டதாகக்கருதி அவளை வீணே நிந்திக்கின்றனர். அம்மாது அத்தகையாள் அல்லவென்று நாங்கள் அறிவோம். அவளுடைய குழந்தைப் பருவம் முதற்கொண்டு அவள் சுபாவங்களை நாங்கள் கண் கூடாகப் பார்த்து வருகிறோம். ஐயோ பாவம்! பழி ஓரிடம் பாவம் ஓரிடம்!!

லலிதை:—ராமமூர்த்தி! லலிதாங்கி நான்தான்.

ராமமூர்த்தி:—"நீங்களா அம்மா-லலிதை நீங்களா" என்று ஆச்சரியத்துடன் அவளை உற்று நோக்கினன். "அம்மா, நீர் உயிருடன் பிழைத்திருப்பதை இப்பாழுங் கண்களால் பார்க்கக் கொடுத்து வைத்தேனே. அதுவே எனக்குப்போதுமானது" எனக்கூறி ஆநந்த பாஷ்பம் சொரிந்து நின்றான்.

லலிதை:—அப்பா, ராமமூர்த்தி! எந்தை எவ்விதமிருக்கிறார். வேலைக்காரர் எல்லாரும் சுகந்தானே. நான் அங்கில்லாமையால் நமது மாளிகை அலங்கோலமாய்க் கிடக்குமே.

ராமமூர்த்தி:---அம்மா, நீ அவரை விட்டு வந்தது முதற்கொண்டு நான் உம்மைத்தேடி வரும் வரையில் சரியான போஜனம் உண்பதில்லை; நல்லுடை அணிவதில்லை. எப்போது பார்த்தாலும் "லலிதா, லலிதா என்னரும் லலிதை" என்று கண்ணீர் வடித்தவராய்ப் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தார்.

லலிதை, "அப்படியா" என்று கூறி மூர்ச்சித்தவளாய்த் தரையில் தொப்பென்று வீழ்ந்தாள். "ஐயையோ! இந்நங்கையைக் கொன்ற பாவி நான் ஆனேனே. இப்பாவத்திற்கென்ன செய்வது" என்று கை கால்கள் பதற ஓடிப்போய் அருகிலிருந்த ஏரி ஜலங் கொணர்ந்து அவள் முகத்திற்றெளித்தான்.

சிறிது நேரஞ் சென்றதும் அவள் தன் சுய நிலைமையடைந்து எழுந்துட்கார்ந்து மான்போல் மிரள மிரளப்பார்த்தாள். "எந்தாய், எந்தாய்! என் பொருட்டு நீர் அவஸ்தைப்பட நான் உயிர் பெற்றிருக்கிறேனே. என்னைப்போன்ற படுபாவி எவள் இருப்பாள். நான் என் காதலன் மீது வைத்துள்ள மனப்பற்றும் எந்தை மீது எனக்குள்ள வரம்பு கடந்த அன்பும் என்னை மிகுதியாய் வருத்துகின்றன. நான் இவ்விடத்தில் இந்நிர்மானுஷ்ய கானகத்தில் இருதலைக்கொள்ளி எறும்பே போல் அவஸ்தைப்படா நிற்கிறேன். என்ன செய்வேன். எவ்வாறுய்வேன்." என்றுரைத்துக் கண்ணீர் வடித்தாள்.

ராமமூர்த்தி:—அம்மா, நீ வீணே அழாதை. நாம் திரும்பிப் போகலாம்."

லலிதை:---என்னருங் காதலரைக் காணுமல் நான் காவிரிப்பூம்பட்டினத்திற்குத் திரும்பேன். யாவும் தலை விதிப்படி நடக்கிறது. நம்மாலாவது ஒன்றுமில்லை. நான் சுகமே இருப்பதாக எந்தைக்கு யாராயினுந் தெரிவித்து அவருடைய மனக்கலக்கத்தை மாற்றினுல்---" என்று முடிக்கு முன்,

ராமமூர்த்தி இடைமடக்கி, "அம்மா, நீர் அன்புடன் வளர்த்து வந்த புறுவினை நான் என்னுடன் கொண்டு வந்திருக்கிறேன். எழுத்தோலையும் எழுத்தாணியும் இதோ இருக்கின்றன. உமது தந்தைக்கு நீர் எழுதவேண்டிய சமாசாரத்தை எழுதி இப்பறவையின் வாயிற் கொடுத்து விட்டால் அது அதை சுகுண சுந்தரரிடஞ் சேர்த்துவிடும். நாமும் ராஜபுதனத்திற்குப்போகலாம்" என்றுரைத்துத் தான் கொண்டு வந்திருந்த சிறிய மூட்டையை அவிழ்த்துப் புறுவை அவள் முன் விடுத்து எழுத்தோலையும் எழுத்தாணியும் எடுத்து வைத்தான்.

லலிதை சிறிது போழ்து அதைத்தடவிக் கொடுத்தாள். மாலை மாலையாய்க் கண்ணீர் விடுத்தாள். எழுத்தோலையும் எழுத்தாணியும் எடுத்து யாதோ வரைந்து முடித்தாள்.

அப்போது குதிரையொன்றின் குளப்படியோசை அவ்விருவர் காதில் வீழ்ந்தது, திடுக்கிட்டவர்களாய் ஓர் ஒதுக்கிடந் தேடி ஒளித்துக் கொண்டனர்.

சிறிது நேரத்திற்கெல்லாம் வாலிபனொருவன் குதிரையேறி அம்மார்க்கமாய் வந்தான். வந்தவன் எவ்விதத்திலேயோ ஒளிந்து கொண்

டிருந்தவர்களைப் பார்த்துவிட்டு உடனே தன் பட்டயத்தை அதன் உறையினின்றுங் கழித்து, அவர்களை நண்ணி, உரத்த குரலுடன், "நீங்கள் எங்கிருப்பவர்கள். இந்நேரத்தில் இங்கு வரவேண்டிய காரணமென்ன?" என்று வினவினான்.

ராமமூர்த்தி மிகுந்த திகிலடைந்து யாதும் பேசாது மௌனஞ் சாதிக்க; லலிதை மறைவிடத்தை விட்டு வெளிப்போந்து, "ஐயா, நாங்கள் வழிப்போக்கர். ராஜபுதனத்திற்குப் போகும் மார்க்கத்தை யறியாமல் விழிக்கின்றோம்." என்றாள்.

வந்தவீரன்:---ராஜபுதனத்தில் எங்கே?

லலிதை:---மீவார் நாடு.

வந்த வீரன்:---அங்கு யாரைப் பார்க்க வேண்டும்?

லலிதை:---காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து வந்திருக்கும் பிரதாப வீரரைக் காணவேண்டும்.

வந்தவீரன்:---இவவிடத்திற்கும் அந்நாட்டிற்கும் இன்னுஞ் சிறிது தூரந் தான் இருக்கிறது. நானும் அங்கு தான் செல்கிறேன். நீங்களும் என் பின்னே வாருங்கள்.

அவ்வீரனை இருவரும் பின் தொடர்ந்தனர். போகும் வழியில் எழுதி முடித்த ஓலையைப் புறாவின் வாயிற்கொடுத்து அதைப்பறந்து போக விடுத்தனர்.

* * *
* * *

இருபத்தொன்றும் அத்தியாயம்

கேடு நினைவு

மீவார் நாட்டின் அரண்யத்தில் மேற்சொன்ன சம்பவம் நடந்தேறி வருகையில் சித்தூர் துர்க்கத்திற் கருகிலிருந்த ஒரு சத்திரத்தில் பிரதாபனும் நரைதிரை மிகுந்த கிழவியொருத்தியும் நெடுநேரம் உரையாடிக் கொண்டிருந்தனர்.

பிரதாபன்:---பாட்டி! நீயே இவவிதஞ் சொல்லிவிட்டால் என்னாலாவதென்ன?--நான அம்மங்கை நல்லாளை மணம்புரியா தொழிவனேல் கட்டாயம் உயிர் துறப்பேன். நான் இறந்தால் அப்பாவம் உன்னை சேரும்.

கிழவி:--"இரும்படிக்குமிடத்தில் நாய்க்கென்ன வேலை என்னும் பழமொழியே போல் புஷ்பங்தொடுத்து விற்கும் உனக்கு ஆண் பிள்ளைகளிடமிருந்து தூது செல்லுந் தொழிலென்னத்திற்கு? உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போ. பிரதாபரைப்பற்றிப் பேச உனக்கிஷ்டமிருப்பின் நீ இனி எனக்குப் புஷ்பமாலை கொண்டு வர வேண்டாம். தெரிந்ததா கிழவி, ஜாக்கிரதை" என்று சொன்னாள் அவவம்மை ஹீராபாய.

பிரதாபன்:---பாட்டி! வீரசேனன் காவிரிப்பூம் பட்டினத்தில் காதலி யொருத்தியை விடுத்து வந்ததைக் கூறினையோ?

கிழவி:---நீர் சொன்னதெல்லாம் ஒன்றுவிடாமல் அவளுக்கு எடுத்துரைத்தேன். அதற்கு, "கிழவி, நீ சொல்வது உண்மையாயிருந்தாலும் நான் அவரை மணம் புரிந்து கொள்ளேன் இது நிச்சயம். வீணெண்ணம் கொள்ளாதே-உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போ" என்று மறுமொழி பகர்ந்தாள். அப்பா, இனி நான் உனக்காகப் பாடுபட்டால் ஜீவனம் செய்வதும் கடினமாய் விடும். அவவிஷயத்தில் தலையிட்டுக் கொண்டு அவஸ்தைப்படமாட்டேன்.

பிரதாபன்:---அப்படி ஜீவனம் செய்வதற்குக் கடினமாய் விட்டால் நான் உனக்குதவி புரிகிறேன். நீ எதற்கும் அஞ்சவேண்டாம்

கிழவி:---இக்காரியத்தை நான் அஞ்சாமல் செய்தால் என் கதி பிறரைக்கெஞ்ச நேரிடும். பிறர் யாதும் இடாவிட்டால் நான் துஞ்ச வேண்டியது தான். இதை உன்னெஞ்சம் அறியட்டும்.

பிரதாபன்:--என் வார்த்தையை நீ நம்பு.

கிழவி:--அதனால் வரும் வம்பு.

பிரதாபன்:---பாட்டி! இன்னொரு தரம் போய் வந்து விடு அதன் பிறகு நீ போகவேண்டாம்.

கிழவி:---அப்பா! இனி நான் உன் விஷயத்தைப்பற்றி அவளிடம் பேசேன். அவள் ஆசையை விட்டொழி.

பிரதாபன்:---சரி, உன்னிஷ்டம். உனக்கதிர்ஷ்டம் அவ்வளவு தான்.

கிழவி:---தள்ளாத வயதில் எனக்கு அதிர்ஷ்டம் இருந்தென்ன-இல்லாமற் போயென்ன.

பிரதாபன் "சரி" என்று மறுமொழி கூறிவிட்டுப் போனான்.

"ஆஹா! பிரதாபனின் கர்வம் இருந்தவாறென்னே! நானேவலிய அவளிடஞ் சென்று இருமுறை உரையாட முயன்றும் என்னைத்திரும்பியும் பாராது சென்றுள். அவளெண்ணம் ஈடேறுவதைப் பார்க்கலாம். பிரதாபன் உயிருடன் இருக்குமளவும் அவள் வீரசேனனை மணம்புரிவதரிது. பிரதாபன் பிரதாபச் செயல்களில் வல்லவனென்பதே. (மௌனம்)

"நெஞ்சே, சிஞ்சித்தும் அஞ்சாதை! ரணவீரவலிங் வீரசேனன் மீது பொறாமையுற்றான். அப்பொறாமையே அவ்விருவருக்கும் மீளாத் துவேஷத்தை யுண்டாக்கிவிடும். அத்துவேஷம் முற்றிய பின் நான் அவளை அடித்துக்கொண்டு போவது எளிதாகும். (மௌனம்)

"லலிதை என்னை மறந்திருப்பாள். சுகுண சுந்தரர் தம்மை யொத்த ஐசுவரியம் மிகுந்த ஒருவனுக்கு அவளை விவாகஞ் செய்து கொடுத்திருந்தாலும் கொடுத்திருப்பார். அதற்கு நானென்ன செய்வது.

"காதலின் வலிமையை எடுத்துரைக்க எவரால் இயலும். ஏ, இன்பம் மிகுந்த காதல்! லலிதையை மணம்புரிய வாக்களித்த நீயே பிரதாப

யைக்காதலிக்கத்தூண்டுகிறாய்.லலிதைக்கும் வீரசேனனுக்கும்நவறிழைத்தஉன்னை, உன்னால் மயங்கிக்கிடக்கும் நான், மன்னிக்கிறேன். முதன்முதலில் லலிதாங்கி யென்னும் தாரகையைக் கண்டு மயங்கினேன். இப்போது ஹீராபாய் என்னும் பூரண சந்திரனைக்கண்டு அதன் மீது காதல் மிகுந்தவனாய்க் களிப்படைகின்றேன், அவசரத்தில் கொடுத்த வாக்கை ஆய்ந்தாய்ந்து பார்த்து நிறைவேற்ற தொழிக்கலாமன்றோ! (மௌனம்)

“இக்கொடிய செய்கையால் லலிதை வீரசேனன் ஆகிய இவ்விருவர் அன்பினை இழக்கின்றவனாகின்றேன். அவ்விதம் இழக்கா தொழிந்தால் என்னுயிரை நான் இழக்கவேண்டும். வீரசேனனின் அன்பைஇழந்துநான் உயிருடனிருப்பேன்;லலிதையை மறந்தால் ஹீராபாயை அடைகிறேன். எனக்கு என் நண்பனின் அன்பைக்காட்டிலும் என் மீதிருக்கு மன்பே சிறந்ததாகும். லலிதையினும் சிறந்தவள் ஹீராபாய். எழிலெலாந் திரண்டு ஓர் உருவமைந்து வந்த ஹீராபாய் வனப்பின் முன் லலிதையின் வனப்பு எம்மாத்திரம்; ஹீராபாய் வெளிச்சத்தின் முன் லலிதை இருட்டை யொப்பாள். நான் லலிதை உயிருடன் இருப்பதை மறந்து விடுகிறேன்; வீரசேனனை என் பகைவனாகக் கருதுகிறேன், ஏ, காதல்! என் மனத்திலுத்த இவ்வெண்ணத்திற்குக் காரண கர்த்தாவாக இருந்த நீ இவ்வெண்ணம் நிறைவேற உதவி புரிவாய். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் அன்றோ!” என்று மனத்திலுன்னிய வண்ணம் நமது கதாநாயகன் சித்தூர் துர்க்கத்தை யடைந்தான்.

இருபத்திரண்டாம் அத்தியாயம்

உண்மை வெளியாதல்

குதிரை யேறிச்சென்ற ரஜபுத்திரவீரனைப் பின் தொடர்ந்த லலிதையும் ராமமூர்த்தியும் ஊரடங்கியிருந்த காரணம்பற்றி ஹீராபாய்க்குப் புஷ்பம்தொடுத்து ஜீவனம் செய்து வந்த கிழவி வாசஞ் செய்யும் சத்திரத்தின் திண்ணையின் மீது பொழுது புலரும் வரையில் நித்திரை புரிந்தனர். சூரியோதயமானதும் லலிதை, “பிரதாப வீரரைக் காண்பேன்” என்று குதுகலமடைந்தாள்.

அப்போது அச்சத்திரத்துக் கிழவி அவ்விருவர்களிடம் வந்து, “ஐயன் மீர்! நீங்களிருப்பது எவ்வூர்? யாது காரணம்பற்றி இவ் வூர் அடைந்தீர்?---என்று நடுங்கிய குரலுடன் வினவினாள்.

லலிதை:---அம்மா, நாங்கள் இருப்பது காவிரிப்பூம்பட்டினம். அப் புராதன நகரினின்று இந்நாட்டுக்கு வந்த பிரதாபவீரரைக்கண்டு அவருடன் சிற்சில விஷயங்களைப்பற்றிப் பேசவேண்டும்.

கிழவி:---என்ன விஷயங்கள்?

லலிதை:---பிரதாபவீரர் அவவிடத்தில் தாம் காதலித்த நங்கை யொருத்தியை விடுத்து இங்கு வந்து நெடுநாட்களாயின. அம்மங்கை இவரது பிரிவாற்றாமையால் நாளுக்கு நாள் மெலிந்து வருகிறாள். அவளுடைய தந்தை இவ்விடத்திற்கு எங்களை அனுப்பி அவரை அழைத்து வரச் சொன்னார். (தொடரும்)

நா. நாகபூஷணம்.

உபாத்தியாயருக்கான பக்கம்

கடிதமெழுதும் ஆற்றல் பெறும் வகை

கடிதம் எழுதுமாற்றலைப் பெறும் வகை எப்படியென்பது ஒரு பெரிய கேள்வியல்லவா? வர்த்தக சாலைகளிலும் உத்தியோக சாலைகளிலும் ஒரு லிகிதர் தேவையாக இருப்பின் அவர்கள், "உத்தியோகம் வேண்டுமென்பவர் கடிதம் எழுதித் தங்கள் யோக்கியதையைத் தெரிவித்து உத்தியோக சம்பந்தமான விஷயத்தை அறிந்து கொள்ளலாம்," என்று சாதாரணம் பிரசுரஞ் செய்கின்றனர். "நேரில் வந்து காணவேண்டும்" என்று பிரசுரஞ் செய்யாது, "கடிதம் எழுதுவது" என்று பிரசுரஞ் செய்யுங் காரணம் யாதாக விருக்குமென்பதனை ஒருசிலரே நுணுகிஆராய்ந்திருப்பார்கள். ஆதலால் அதன் காரணத்தை ஒருவாறு இவ்விடத்திற் சுருக்கிக்கூறுவோம்.

கடிதமூலமாக தன் யோக்கியதை அறிவிக்க முன்வருபவன்,

(1) பொய்கலவாது மெய்ம்மையையே எழுதுவான். வாயினாற் கூறுவதாயின் முதலில் ஒன்றைச் சொல்லவும் பிறகு தன்னிஷ்டம்போல அதை மாற்றிக்கொள்ளவும் இடமிருக்கிறது. கடிதத்தில் அது இயலாது.

(2) சுத்தமாகவும் முறைப்படியும் எழுதமுயற்சிசெய்வான்

(3) தனது கருத்தினைப் பிறர் எளிதில் உணரும்படி தெளிவாகவே எழுதுவான். இவை போன்றவை எழுதுவோன் செய்யுங் காரியம்.

அப்ளிகேஷன் கிடைக்கப்பெற்ற வியாபாரி அப்ளிகேஷனைப் பார்த்ததும் இது சுத்தமாக எழுதப் பெற்றிருப்பதால் இவன் சுசியுடைமை பொருந்தப் பெற்றவனென்றும், மடிக்க வேண்டிய முறைப்படி மடித்து, உறையில் போடப்பட்டிருப்பதாலும் தேதி, விலாசம் முதலியவை குறிக்கப்பட வேண்டிய விடத்தில் குறிக்கப்பட்டிருப்பதாலும் கடிதம் எழுதும் முறையறிந்தவனென்றும், இதில் எழுதப்பெற்றுள்ள விஷயங்கள் தெளிவாகவும் இனிமையாகவும் ஆற்றொழுக்கு போன்றும் இருப்பதால் தன் கருத்தைப்பிற ரறியும் வண்ணம் வெளியிடக்கூடியவன் என்றும், இன் சொல்லன் என்றும், இடர்ப்படாது எழுதக்கூடியவன என்றும் தீர்மானித்து வேலையைத் தருகின்றனர். இவைகள் இல்லார்க்கு அவர்கள் வேலைகொடுப்பதில்லை. ஆனபடியினால் ஒவ்வொருவரும் தாம் எழுதுவதைச் சுத்தமாக எழுதுதல் வேண்டும்; பொருள் விளங்குமபடி எழுதுதல் வேண்டும்; இனிமை பயக்கும் சொற்களைக் கலந்து எழுதுதல் வேண்டும்; இடர்ப்படாது தீவிரமாகவும் எழுதுதல் வேண்டும். இவ்வித அரிய இலக்கணம் அமையப்பெற்ற வசன நடை தான் வசன நடை என்று எல்லோராலும் கருதவும் போற்றவும் படும்.

இந்த வசனநடையை நமது சிறுவர் பெறுதற்குப் பலர் பலவிதமான குறிப்புக்களைத் தருகின்றனர். கடிதம் எழுதும் முன் விஷயத்தை ஒன்றின் பின் ஒன்றாக ஒரு சிறு கடிதத்தில் குறித்து வைத்துக் கொண்டு பிறகு அவற்றை விரித்து எழுத வேண்டுமெனச் சிலர் கூறுகின்றனர். சிலர் பழைய கடிதங்களைப் படிப்பதால் எழுதும் ஆற்றல் வரக்கூடுமென்கின்றனர். சிலர், பழைய வித்துவான்களுடைய கடிதங்களையும் அவர்கள் வசன நூல்களையும் மனப்பாடம் செய்வதால் ஆற்றல் வருமென்று மனப்பால் குடிக்கின்றனர். இவைகளெல்லாம் எமக்கு உடன்பாடல்ல. பின் நம் இளைஞர் அவ்வாற்றலைப் பெறும்வகை தான் எங்ஙனமென்னில் கூறுகின்றோம் கேளும்.

நமது பெரியோர், "விடியற் காலத்தில் விழித்து, அடுத்த நாளில் செய்தற்குரிய தருமகாரியங்களையும் திரவியம் சம்பாதித்தற்கு வேண்டிய காரியங்களையும் ஆராய்ந்து யோசித்துக் கொண்டு, பின்பு பொழுது விடிந்தால் தாய் தந்தையரைத் தொழுது கொண்டே எழுந்து, அப்பால் ஒரு காரியம் செய்யத் தொடங்குக", என்னும் பொருள் கொண்டதாகிய.

" வைகறையாமந் துயிலெழுந்துதான் செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து—வாய்வதில்
தந்தையும்தாயும் தொழு தெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை.

என்னுஞ் செய்யுளைச் செய்திருக்கின்றனர். அச்செய்யுளில் "தான் செய்யும் நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து" என்று கூறியுள்ளபடி செய்யுமாறு நாம் நம் சிறுவர்களைத் தூண்டுவேமாயின் அவ்வாற்றல் சுலபமாகவே அவர்களுக்கு வந்தமையும்.

மேலே காட்டிய செய்யுளில் கூறியபடி அவர்கள் சிந்தித்தல் மாத்திரம் சாலாது. ஒவ்வொரு நாளும் நமது சிறுவர்கள் காலையிலெழுந்து தாம் அற்றைய தினம் செய்யக்கருதும் வேலைகளைச் சிந்தித்து ஒரு சிறுபுத்தகத்தில் குறிக்கவேண்டும். பிறகு இரவில் படுக்கைக்குப் போகும்போது தாம் அன்றைய பகலில் செய்து முடித்தவைகளையும் அப்புத்தகத்திலே குறிக்கவேண்டும். இவ்வாறு பிரதிதினமும் செய்து வருவார்களாயின் தமது கருத்தைப் பிறரறிய வெளியிடும் பழக்கம் வந்தமையும். நாள

டையில் கடிதமெழுது மாற்றல்வந்து கைகூடும்; கடிதமெழுதுதற்கு வேண்டிய கருத்துக்களும் விருத்தியாகும். இவற்றோடு சொற்றவறாமை, குறித்த காலங்கடவாமை, வீண்காலம் போக்காமை, மெய்ம்மை, பெற்றோர்ப்பேணுதல், நல்லொழுக்கம்முதலிய அருங்குணங்களெல்லாம் வந்து அவர்களிடம் குடியிருக்க விரும்பும்.

பெருக்கலில் வரும் குணிதம் சரியோ எனக் கண்டறிதற்குறிய வழிகள்

குணிதத்தின் யாதார்த்தியத்தைப் பின் வருமாறு ஒன்பதுகளை நீக்கிப்பார்த்து அறியலாம். குணகத்தில் (Multiplier) இருக்கும் அங்கங்களையும், குணிய (Multiplcand) த்தில் இருக்கும் அங்கங்களையும் குணிதத்தில் (Product) இருக்கும் அங்கங்களையும் தனித்தனியே வலத்திலிருந்து இடம் வரையில் கூட்டுக; அப்படிக் கூட்டும்போது இடையில் வரும் ஒன்பதுகளையும், இரண்டு மூன்று அங்கங்களைக் கூட்டலால் வரும் ஒன்பதுகளையும் நீக்குக; அப்படி நீக்குவதோடு மேலே சொன்ன கூட்டலில் வரும் தொகை ஒன்பது என்னும் எண்ணுக்கும் அதிகப்பட்டதாயின் அத்தொகையிலிருந்து ஒன்பதைக் கழித்துவிடவும். இவ்வாறு செய்யின் ஒரு சிறு எண் மிச்சமாக நிற்கும்.

(1)	5 2 0 0 9 0 3
	1 0 3 0 9
	5 3 6 1 6 1 0 9 0 2 7

இது பெருக்கற் கணக்கு. இந்தக் கணக்கில் குணியமாகிய 5 2 0 0 9 0 3 என்பதை முதலிற் கூட்டுவோம்

3, 0, (ஒன்பதை நீக்கவேண்டியபடி இதனை நீக்குவோம்),

0, 0, 2, 5=இதன் மொத்தம் 10.இந்தப் 10 லிருந்து 9 ஐக் கழிக்கவும்—பிறகு மிச்சம் 1 யாம் கூட்டிய முறையாவது 3, 5, 10, 1

குணகத்தை இப்பொழுது கூட்டுவோம், 1 0 3 0 9 என்னும் குணகத்தில் 9 ஐ நீக்குக. பிறகு 3+1=4. மிச்சம் 4.யாம் கூட்டிய வழி 3, 4

குணிதத்தை இப்பொழுது கூட்டுவோம்.

5 3 6 1 6 1 0 9 0 2 7 என்னும் குணிதத்தினைக் கூட்டும் முறை 7, (=7+2)

1, 7, 8, 14=9+5. இதில் ஒன்பதை ஒழிக்கவும்.

5, 8, 13=9+4—இதில் ஒன்பதை நீக்கவும்-மிச்சம்-4.

இவ்வழி நன்றாகத் தெரிந்திருந்தால் எந்தப்பெருக்கற் கணக்கினையும் சுலபமாகக் குணியத்திலுள்ள ஒன்பதுகளையும், குணகத்திலுள்ள ஒன்பதுகளையும், குணிதத்திலுள்ள ஒன்பதுகளையும் நீக்கி; குணியத்தின் மிச்சத்தைக் குணகத்தின் மிச்சத்தாற் பெருக்க வரும் குணிதம், பழைய குணித மிச்சத்திற்கு ஒத்திருக்கும். ஒருவேளை ஒவ்வாமல் பெரிய எண்ணாக அக்குணிதம் ஏற்படுமாயின் மறுபடியும் அதிலிருந்து 9-ஐக்கழிக்கவும் அப்படிக்கழிப்பதனால் வரும் மிச்சம் பழைய குணித மிச்சத்தினை ஒத்திருக்கும்.

5 2 0 0 9 0 3—இந்தக் குணியத்தில்வந்துள்ள மிச்சம் 1
1 0 3 0 9 —இந்தக் குணகத்தில்வந்துள்ள மிச்சம் 4

5 3 6 1 6 1 0 9 0 2 7-இந்தக்குணிதத்தில் வந்துள்ள மிச்சம் 4

1; 4; 4; என்னும் மிச்சங்கள் வந்துள்ள விதத்தினை மேலே கூட்டிய முறையைப் பார்த்துத் தெரிந்து கொள்ளவும்.

குணியத்திலிருக்கும் மிச்சமாகிய 1 ஐ, குணகத்தில் இருக்கும் மிச்சமாகிய 4 இனால் பெருக்குவோமாகில் வரவேண்டிய குணிதமாகிய 4 ஏ குணிதத்தில் மிச்சமாகவும் வந்திருப்பதைக் கவனிக்கவும்.

(2) 2 5 7 8 1 3—மிச்சம் 8 } 6×8=48
2 4 8 1 மிச்சம் 6 } இதில் மிச்சம் 3

6 3 9 6 3 4 0 5 3 ... ... மிச்சம் 3

இதனால் இக்கணக்குக்கு வந்துள்ள குணிதம் சரியென்றே சொல்ல வேண்டியது.

(இன்னும் வரும்)

சி. சோமசுந்தரம் பிள்ளை.

ஜயவீரன் அல்லது பழிக்குப்பழி

(33-ம் பக்கத் தொடர்ச்சி)

"தடையிராது; இப்பொழுது ஆகவேண்டிய காரியத்தைச் சீக்கிரம் முடியடா. அகப்பட்டுக்கொண்டால் ஆபத்தாக முடியும்," என்றான் மற்றவன்.

இந்தச் சமயத்தில் ஜயதேவன் மெல்லெனக் கண்திறந்தான். அப்பொழுது அவன் அரைத்தூக்கத்தில் இருந்தபோதிலும் ஏதோ அசம்பவம் நடந்திருக்கிறதென அறிந்து கொண்டான். கயவர் இருவரும் அவனை விறைத்துப் பார்த்தார்கள்.

அவர்களில் ஒருவன் "பையன் விழித்துக் கொள்ளுண்டா. நல்ல பாம்புக்குட்டியை நம்பப் ... ." என்று சொல்லி வாக்கியத்தை முடிப்பதற்குள், ஜயவீரன் பொருக் கென்றெழுந்து, "ஓ" என்று இரைந்து கொண்டு, அவர்களுள் ஒருவன் மீது பாய்ந்து அவன் தொண்டையைப் பிடித்து நெரித்துத் தன் வலது கையால் அவன் முகத்திற்குத்தினான். அப்பொழுது மற்றவன் தன் கையிலிருந்த ஆயுதத்தால் ஜயவீரன் மண்டை மீது அடித்தான். ஜயவீரன் மூர்ச்சையாகிக் கீழே விழுந்து விட்டான்.

உடனே அந்தத் துஷ்டர்களிருவரும் கதவைத் திறந்து கொண்டு நாலுபக்கமும் பார்த்தார்கள். மிகுந்த இருளாக இருந்தபடியால் ஒன்றும் தெரியவேயில்லை. இனி ஒரு நிமிஷம் கூட நிற்கப்படாதென்று பேசிக்கொண்டு ஒருவர் பின் ஒருவராக வண்டியை விட்டுக் கீழே குதித்தார்கள். அவர்கள் குதித்தவிடமோ மணற்றரையாக விருந்தது. அதனால் அவர்களுக்குக் காயம் படவில்லை. காயம்படா விட்டபோதிலும் விழுந்த அதிர்ச்சியினால் இருவரும் சில நிமிஷம் வரையில் பிரஞ்ஞையற்றுக் கிடந்தார்கள்.

பிறகு, ஜயவீரனை அடித்தவன் மெதுவாக எழுந்து உட்கார்ந்து கொண்டு, "இப்ப பொழுது விடியுமுன்னே நாம் செய்த வேலையை நம் கூட்டாளிங்க கேட்டா ரொம்ப சந்தோஸப் படுவாங்க அல்ல?" என்றான்.

"சரிதாண்டா இனிநாம் இருப்பது சுத்த முட்டாள் தனம் அந்தப் பச்சை விளக்கைமாத்தி சிகப்பு விளக்குப் போட்டோமே. அதனால் சந்தேகப்பட்டு எவனாவது இந்தப் பக்கம் வருவான். அவன் வருதற்கு முன்னே நாம் ஓடித்தப்பும் வழியைப் பார்க்கவேணும்; அல்லாவிட்டால் வந்து மோசம், என்றான் அவன் தோழன்."

மற்றவனும், "அது சரி," என்று ஒத்துக் கொண்டான். உடனே அவ்விருவரும் எழுந்து வயல்களிலும் வரப்புகளிலும் விழுந்து ஓடினார்கள்.

மாதேவர் கையில் கடிதம் ஒன்று சிக்கியிருந்தது. அதில் சில குறிப்புகள் குறிக்கப்பட்டிருந்தன. அக்குறிப்புகளைக்கொண்ட அக்கடிதத்தினை அபகரிக்கக் கள்வர் கூட்டத்தார் பெரிதும் முயன்று கொண்டிருந்தனர். அக்கடிதத்திற்காக அவர்கள் அவ்வளவு முயற்சி செய்யவேண்டிய காரணம் யாதாயிருக்கும் என்னும் சந்தேகம் இக்கதையை வாசிப்போருக்கிருக்கலாம். அக்கடிதத்தின் மூலமாக அவர்களுக்கு அளவற்ற பொருள் கிடைப்பதாக விருந்தது. ஒருசிறு கடிதத்தின் துணையால் அளவற்ற திரவியம் கிடைப்பதாக விருந்தால் எவர்தான் அதற்காக முயற்சிசெய்யாதிருப்பார்கள்? அக்கடிதத்தின் மூலமாகத்தமக்குப் பெருஞ் செல்வம் கிடைக்கக் கூடும் என்பதை அறிந்த கள்வர்தலைவன, மாதேவர் பையிலுள்ள கடிதங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு வரும்படி உத்தரவு செய்து, அவ்விருவரையும் அனுப்பினான். அவர் அந்தக் கடிதத்தினைத்தன் ஜேபியில் (பையில்) வைததிருப்பாரென்பது அவன் எண்ணம்.

தலைவன் உத்தரவு அவ்வாறு இருந்தபடியினால் அந்தக் கயவர் இருவரும் மாதேவரைக் கொன்று அவர் சட்டைப்பையிலிருந்த கடிதங்களையெல்லாம் யெடுத்துக்கொண்டு சென்றனர். இதுநிற்க,

மெயில் வண்டி செங்கற்பட் ஸ்டேஷன் வந்து சேர்ந்தது. சாதாரணமாக ஸ்டேஷன்களில் வண்டிவந்து நிற்கும்போது, அங்குள்ள கூலியாட்கள் முதல்வகுப்பு, இரண்டாம்வகுப்பு வண்டிகளையே நோக்கி ஓடுவது வழக்கமல்லவா? அந்த வகுப்புவண்டியில் சாதாரணமாக ஏறுபவர்கள் பணக்காரர்தானே? அவர்கள் கூலி சற்று அதிகம்கொடுப்பதுண்டல்லவா? இதுசிலசந்தர்ப்பங்களில் சரியாகவும் இருக்கும்; சிலசமயங்களில் அப்படியிருப்பதுமில்லை. முதல்வகுப்பு இரண்டாம் வகுப்புக்களில் ஏறுபவரிற் சிலர் கூலியாட்களிடம் செவ்வையாக வேலையை வாங்கிக் கொண்டு, அவர்கள் கூலிகேட்டால், "ரயில்வே போர்ட்டர்களுக்கும் கூலிகொடுக்கும்படிகம்பனிசட்டத்தில் இல்லை," என்று வாயடி கையடி அடித்துத துரத்துவார்கள்.

அப்படி அவர்கள் துரத்தியபோதிலும், இவ்வேழைக் கூலியாட்கள் தங்கள் வயிற்றுப்பாட்டுக்கு வழிசெய்ய வேண்டுமே என்னும் பயத்தால், காலடியோ கையடியோ பட்டுக்கொண்டு, அவர்களுக்கே வேலை செய்து, கெஞ்சிக் கூத்தாடித்தம் கூலியை விடாமல் வாங்குவது வழக்கமாக இருக்கிறது.

தங்கள்வழக்கப்படி, சில கூலியாட்கள் முதல் வகுப்பு இரண்டாம் வகுப்பு வண்டிகளை நோக்கி ஓடினார்கள். அப்படி ஓடியவர்களில் ஒருவன் மாதேவர் கொலையுண்டு கிடப்பதையும் அவன் மகன்மூர்ச்சையாய்க்கிடைப்பதையும் பார்த்து விட்டுத் திகிலடைந்து, அடியெடுத்து வையாமல், அவ்விடத்திலேயே நின்று கொண்டு, "ஐயோ! இது என்ன அநியாயம்!" என்று கூவினான்.

சில விநாடிகளுக்குள்ளாக, ஸ்டேஷனில் இருந்தவர்களிற் பலரும் திரண்டு வந்து அங்குக் கூடிவிட்டனர். சற்று நேரத்திற்குள் மாதேவர் பிரேதத்தையும், பிணம்போற் செயலற்றுக்கிடந்த ஜயவீரனையும் சிலர், பிரயாணிகள் தங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள இடத்திற்குத்தூக்கிக்கொண்டு போயினர்.

முன்னாள் நல்ல தேகாரோக்கியத்துடன் இருந்த பெயர் போன போலீஸ் உத்தியோகஸ்தர் மறுதினம் பொழுது புலர்வதற்கு முன் பிணமாய்க் கிடப்பதைப் பார்க்கப் பரிதாபமாகவேயிருந்தது.

"நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்,
பெருமை யுடைத்திவ் வுலகு"

என்னும் பொய்யா மொழியார் வாக்குப் பொய்யாவதுமுண்டோ?

மாதேவர் இறப்பதற்குச் சில வருஷங்களுக்கு முன்னரே அவர் மனைவியார் இறந்து போயினர் அதனால் பிரஞ்ஞையற்றுக்கிடக்கும் ஜயவீரன் தாய் தந்தையற்ற துர்ப்பாக்கியனான சிறுவனானான்.

மாதேவர் அநியாயமாய்க் கொலையுண்டதனால் சென்னை ஹைகோர்ட்டில் குற்றவாளியாக அடைக்கப்பட்டு இருந்தகுருசாமி என்பவன் மரணதண்டனைக்குத்தப்புவான் என்றுஎண்ணிவிட வேண்டாம். அவன் மரணதண்டனைக்குத் தப்பவேயில்லை.

ஜயவீரன் செங்கற்பட்டிலுள்ள வைத்திய சாலைக்குக் கொண்டு போகப் பட்டான். அவனுக்கு உடம்பு சுகப்பட ஒருவாரத்திற்கு மேலாயிற்று. அதற்கு அப்பால் அவன் தென்காசியிலிருந்த தனது அத்தையம்மாள் வீட்டிற்குச் சென்று சேர்ந்து அவளுடைய ஆதரவின் கீழிருந்து வந்தான்.

அப்படியிருந்து வரும்பொழுது ஒருநாள், அவன் தன் தந்தையின் பெட்டியொன்றைத் திறந்து பார்த்தான். அதிற் பலவகையான கடிதங்களும் பாத்திரங்களும் இருந்தன. அவைகளில் ஒன்று தடிந்த கடிதமாகயிருந்தது. அதை எடுத்து ஜய

வீரன் பிரித்துப் பார்த்தான். அதில் பின் வருமாறு எழுதப் பெற்றிருந்தது.

என் ஆஸ்தியைப் பார்க்க



ஜயவீரன் இந்தக் கடிதத்தைப் பன்முறை வாசித்துப்பார்த்தான். எத்தனைமுறை படித்தும் அதன் கருத்து அவனுக்குச் சிறிதும் புலப்படவில்லை. அவன் தகப்பனார் அவனுக்குக் கொஞ்சம் திரவியம் வைத்திருந்தார். அதைத்தவிர வேறு திரண்ட ஆஸ்தி அவர் வைத்திருந்ததாக அவன் அதுவரையில் கேள்விப்பட்டதே கிடையாது. அதனால் அவன் அந்தக் கடிதத்தை முன்போலவே மடித்து வைத்து விட்டான். அந்தக்கடிதத்திற் காகத்தான் தன் தந்தை கொலையுண்டாரென்பதை அவன் ஒரு சிறிதும் அறியான்.

அவன் அத்தை அவனைக் கொஞ்சமும் கவனிப்பதில்லை. சோற்றுக் கடையில் வேலைக்குச்சோறு போடுவது போல அவனுக்கு இருவேளையும் சோறு போடுவாள். இதைத்தவிர அவள் வேறொன்றுஞ் செய்யாள்.

ஒருநாள் அவன் தன் அத்தையை நோக்கி, "அத்தையே, நான் இனி இங்கிருக்க மாட்டேன். அப்பாவைக் கொன்ற பாதகரைக் கண்டு பிடித்துப் போலீஸார் வசம் ஒப்புவிக்கப் போகிறேன்." என்று சொன்னான்.

அதைக்கேட்டு அவன் அத்தையாகிய செல்லம்மாள், தன்னால் கூடியவரையில் அவனைத் தடுக்க முயன்றாள், முயன்றும் அவன் கேட்கவில்லை ஒரே பிடிவாதமாக விருந்தான்.

மாதேவரைக் கொலைசெய்த பாதகர்களைக் கண்டுபிடிக்கப் போலீஸார் தங்களாலானவரையில் முயற்சி செய்தார்கள். அவர்கள் முயற்சி பிரயோஜனப் படாமற் போய்விட்டது.

(இன்னும் வரும்)

சி. சோமசுந்தரம் பிள்ளை.

சுகர் நாடி என்னும்

சோதிட சிகாமணி

மூலமும் உரையும்.

திரிகலா கணிதம். (ரூபா-3.) பூர்வீகசாஸ்திரம்.

ஜோதிடங்களில், முதநூல், வழிநூல், சார்புநூல் யென்று சொல்லப்பட்ட பூர்வீக சாஸ்திரங்களில் இந்த சுகர்நாடி யென்னும் சோதிடசாஸ்திரம் ஒன்றைத்தான் முதல் நூலென்று சொல்லப்படும் (அதாவது) பசும்பாலினிடமாக, தயிர் மோர், வெண்ணெ நெய், முதலியவைகள் யெப்படி உண்டுபண்ணிக் கொள்வார்களோ அதுபோலவே இவ்வுலகத்திலுள்ள எல்லாஜோதிடசாஸ்திரங்களும் எல்லா ஆரூடசாஸ்திரங்களும் இந்த சுகர்நாடி யென்னும் பெருநூலிலிருந்து உற்பத்தியான சிறு சிறு கிளைநூல்களென்று யாவரும் பரிஷ்காரமாய் தெரிந்து கொள்ளலாம்.

இந்த சுகர் நாடி யென்பது சுமார் ஐயாயிரசுலோக தாத்பரியங்களும் அநேகநூறு கணக்கான காலசக்கரங்களும் அடங்கியிருப்பதன்னியில் சந்தேக வினாக்களுக்கு விடையும் தெவித்திருப்பதனால் இந்தசாஸ்திரம் ஒன்றைக்கொண்டே யூகிக்குமளவில் எல்லா காலங்களுக்கும் எல்லாஜனங்களுக்கும் மனிதர் விலங்கு பறவை முதலிய ரூபபேத குறிப்புகளும் பிரித்தெழுத ஒழுங்கானது. பிம்மாண்டமானபெரியசாஸ்திரம். சுமார்-850 பக்கங்களுடைய பெரிய நூல்.

சிலதலைப்பெயர்களை மாத்திரம் இதனடியிற் குறிக்கப்பட்டது.

மங்களபாவம்	தீர்க்கஆயுள்	ஜோதிடவித்தியாயோக
மங்களவிசேடம்	சகோதரபாவம்	சமபாக்கியயோகம்
களத்திரப்பொருத்தம்	உத்தமசகோதரம்	யோக்கியதாயோகம்
சமகளத்திரம்	அவசகோதரம்	வாகனயோகம்
உத்தமகளத்திரம்	துவேஷசகோதரம்	பூபாக்கியதாயோகம்
அவகளத்திரம்	பூரணபிதுர்	தவயோகம்
களத்திரமாரகம்	மாதுர்பலன்	அவயோகம்
புத்திரபாவம்	அவமங்கலமாதுர்	தரித்திரயோகம்
மத்திமபுத்திரர்	துர்மார்க்கமாதுர்	ஜெனனகாலநிச்சயம்
தீர்க்காயுட்புத்திரர்	பூரணமாதுர்	ஜெனனகாலசெலவு
அற்பாயுட்புத்திரர்	யோகபாகப்பொது	ஜெனனகாலநிலுவை
சுவீகாரபுத்திரர்	இராஜயோகம்	திசைவரிட்டவிவரம்
நபுத்திர ஜாதகம்	பிரபலயோகம்	மகாதிசைப்போக்கு
துவேஷபுத்திரர்	பிரபலபாக்கிய யோகம்	காலசக்கிரதிசை
புத்திரமாரகம்	தனபாக்கியயோகம்	திரிகோணசோதனை
விசேடபுத்திரர்	பிரபுத்துவயோகம்	அரணவிரணம்
மத்திமஆயுள்	அதிகாரயோகம்	அகாலமரணம்
அற்பஆயுள்	விற்பன்னயோகம்	எழுவகைத்தோற்றம்

இதுபோன்ற இன்னும் அநேக ஆயிரக்கணக்கான ஜெனன ரகசியங்களடங்கி யிருக்கின்றன. இதன் விலை ரூபா--3.

மானேஜர், 'கலாசிந்தாமணி, மயிலாப்பூர் மதராஸ்.